பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | புரட்டாதி 06 | 22-09-94 | வியாழக்கிழமை | ஓசை 216

## புதிய ஆசிரியர் சேவைத் திட்டம் விரைவில் நடைமுறைக்கு வரும்

நாட்டிலுள்ள ஓர் இலட்சத்து தொண்ணூற்றி மூவாயிரம் ஆசிரியர்களுக்கான சேவைத்திட்டமொன்று விரைவில் நடைமுறைப்படுத்தப் படவுள்ளது. இதற்கென, 376 கோடி ரூபா தேவைப்படும் என கல்வி, உயர் கல்வி அமைச்சர் ரிச்சார்ட் பத்திரான தெரிவித்துள்ளார். ஐந்து தரங்களைக் கொண்ட ஆசிரியர் சேவை ஆரம்பிக்கப்பட்டதும் பதவியுயர்வு பெற அரசியல்வாதிகளின் பின்னால் செல்லவேண்டியிராது. முதலில் 5-ம் தரத்தில் நியமனம் பெறும் ஒருவர் எந்த (6-ம் பக்கம் பார்க்க)

# போர்க் கப்பல் மூழ்கடிக்கப்பட்டதினால் சமாதான முயற்சிகள் பாதிப்படையாது!

கடற்படைச் சூட்டுக்குப் பலியான

## இளைஞர் சடலம் கரை ஒதுங்கியது

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை கடற்பகுதியில் இளைஞர் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் காலை கரைஒதுங்கியது.

கடந்த ஞாயிற்றுக் கிழமை கடற்படையினரின் சூட்டுக்கு இலக்காகி பலியான ஆதிகோவிலடியைச் சேர்ந்த ஸ்ரீஸ்கந்தராசா கருணாகரன் என்பவரது சடலம் என பின்னர் அடையாளம் காணப்பட்டது.

துப்பாக்கிச் சூடுபட்டு உருக்குலைந்த நிலையில் ஒதுங்கிய இச் சடலத்தை உறவினர் மீட்டு அடக்கம் செய்தனர்.

(யோ)

## பொதுநல அமைப்புகளை பதிவுசெய்ய கோரிக்கை

சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்தி சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் முதலான பொதுநல அமைப்புகள் யாவும் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 10-ம் திகதிக்கு முன்பாக தமிழீழ நிர்வாகசேவையில் பதிவு செய்து சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளுமாறு தமிழீழ நிர்வாக

எமது பிரதேசத்தில் உள்ள சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்தி சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள் முதலியன கிராம சமூக மட்டங்களில் சமூக பொருளாதார அபிவிருத்திக்கும் சமூகங்களிடையே நல்லுறவையும், ஒற்றுமையையும் பேணி ஆரோக்கியமான சமுதாயத்தை வளர்த்தெடுப்

## பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

[கொழும்பு]

கற்பிட்டிக் கடலில் கடற்படைக் கப்பல் கடற்புலிகளால் மூழ்கடிக்கப்பட்டபோதிலும் புதிய அரசின் சமாதான முயற்சிகள் தொடரும் என பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த தெரிவித்தார்.



கடற்படைக் கப்பல் மூழ்கடிப்பு தொடர்பாக அவர் செய்தியாளர் மாநாடு ஒன்றில் கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார். வடக்கு-கிழக்கில் சமாதானத்தை ஏற்படுத்த தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் முயற்சிகளை கப்பல் மூழ்கடிக்கப்பட்டதற்காக ஒத்திவைக்க முடியாது.

சமாதான முயற்சி தொடர்பாக விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அனுப்பிய கடிதம் எமக்கு கிடைக்கப்பெற்றபோதும் நாம் இதுவரை எந்தப் பதிலும் அனுப்பவில்லை. எமது பதில் கடிதத்தின் பின்பே புலிகளின் பதிலை நாம் எதிர்பார்க்க முடியும் என்றும் அமைச்சர் ரத்வத்த கூறினார்.

மற்றுமோர் கேள்விக்கு (6ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். தபால் சேவையை சீராக்குவதாக உறுதி

(கொழும்பு)

வடபிராந்திய தபால் அத்தியட்சகர் தபால் தொலைத்தொடர்புகள் அமைச்சரிடம் வடபகுதி தபால் சீராக்கம் பற்றியும் வடபகுதிக்கு வரும் வெளிநாட்டுத் தபால்கள் உடைத்த நிலையில் வந்து சேர்வது பற்றியும் மற்றும் தபால் சேவையின் தேவைகள் பற்றியும் எடுத்து விளக்கியுள்ளார்.

கொழும்பில் நடைபெறும் பிராந்திய தபால் அத்தியட்சகர்களிற்கான மாதாந்தக் (6ஆம் பக்கம் பார்க்க)

## செயலகம் கோரிக்கை; புதிய அரசு மௌனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்தினால் புதிய அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்ட சில முக்கியமான கோரிக்கைகளுக்கு சிறிலங்கா அரசு மௌனம் சாதித்து வருகின்றது.

செயலக அதிகாரிகளினால் தயாரிக்கப்பட்ட சில அடிப்படைக் கோரிக்கைகள் அடங்கிய அறிக்கை ஒன்றை யாழ் அரசாங்க அதிபர் பிரதமர் சந்திரிகா குமாரதுங்காவிடம் சமர்ப்பித்திருந்தார்.

இந்த அறிக்கையில் உள்ள முக்கியமான சில விஷயங்கள் பற்றி அரச அதிபர் பிரதமருடனும் ஏனைய சில அமைச்சர்களுடனும், அமைச் (6ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தை உலகம் அங்கீகரிக்க வேண்டும்

அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம்

(கொழும்பு)

புலிகளின் நிர்வாகத்தை இந்தியா உட்பட சர்வதேச

ஜெயசிங்கா தெரிவித்தார்; தமிழீழத்திற்கு மாற்றாக ஓர் தீர்வு முன் வைக்கப்பட்

டுக்கொடுப்பதாக அர்த்தம் கொள்ளக்கூடாது எனவும் போர் நிறுத்தம் சமாதானப்

எம்பிலிப்பிட்டிய மாணவர் கொலை

## சந்தேக நபர்களை

மாதம் 10-ம் திகதிக்கு முன்பாக தமிழீழ நிர்வாகசேவையில் பதிவு செய்து சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளுமாறு தமிழீழ நிர்வாக சேவையினர் கேட்டுள்ளனர்.

இதுகுறித்து வெளியிடப்பட்ட அறிக்கையில்;

சமூகங்களிடையே நல்லுறவையும், ஒற்றுமையையும் பேணி ஆரோக்கியமான சமுதாயத்தை வளர்த்தெடுப்பதற்காகவும் உருவாக்கப்பட்டவையாகும்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## உரக் கப்பல் விபத்திற்கு துறைமுக பகுதியே காரணம்

(யாழ்ப்பாணம்)

சமீபத்தில் ஹபரண கப்பல் துறைமுக சுவரை மோதி இடித்ததற்கு கப்பல் கம்பனி பொறுப்பல்ல; துறைமுக அதிகார சபையே பொறுப்பேற்க வேண்டும் என கப்பல் கம்பனி அறிவித்துள்ளது

கடந்த 7ஆம் திகதி உரம் ஏற்றிய நிலையில் ஹபரண கப்பல் வடபகுதி நோக்கி புறப்பட்ட வேளையில் சுவரை மோதியதில் பல இலட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டது.

இந்த நஷ்டப் பணத்தை கப்பல் கம்பனி கட்டும்வரை ஹபரண கப்பல் தடுத்து வைக்கப்படும் என துறைமுக

(6ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம்

(கொழும்பு)

புலிகளின் நிர்வாகத்தை இந்தியா உட்பட சர்வதேசமும் அங்கீகரிக்க வேண்டும் என்பதே எம் விருப்பம் என விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்ததாக ஏ.எப்.பி செய்தியாளர் அமால் ஜெயசிங்கா தெரிவித்தார்;

தமிழீழத்திற்கு மாற்றாக ஓர் தீர்வு முன் வைக்கப்பட்டால் அதைத் தாம் பரிசீலிக்க தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். இதற்காக நாம் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை விட்டுக்கொடுப்பதாக அர்த்தம் கொள்ளக்கூடாது எனவும் போர் நிறுத்தம் சமாதானப் பேச்சிற்கு முன்பாக அவசியமானது என்றும் அன்ரன் பாலசிங்கம் வலியுறுத்தினார். அதற்காக இராணுவம் தாம் வைத்துள்ள எப்பகுதியையும்

(6ஆம் பக்கம் பார்க்க)

## சந்தேக நபர்களை கைதுசெய்வதில் அசமந்தம்

(கொழும்பு)

எம்பிலிப்பிட்டிய பாடசாலை மாணவர் கொலை தொடர்பாக சந்தேக நபர்களைக் கைது செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் இவர்கள் உடனடியாக கைதுசெய்யப்படவுள்ளதாகவும் குற்றப்புலன் விசாரணை பணியக சிரேஷ்ட அதிகாரி மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இம்மாணவர் கொலை தொடர்பான சந்தேக நபர்களில் அனேகர் இராணுவத்தில் இருப்பதினால் இவர்களை கைது செய்வதற்கு இராணுவ பொலிசாரின் உதவியை பெற்றுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

[6ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் சமாதான அறிவிப்பு அரசுக்குப் பெரும் அழுத்தம்

### ஏ. எவ். பி. செய்தியாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் தனிநாட்டு கோரிக்கைக்குப் பதிலாக மாற்றுத்திட்டத்தை முன்வைக்க முன்வந்தமையானது அரசுக்கு பெரும் அழுத்தத்தை கொடுப்பதாக அமைகிறது சமாதான முயற்சிகளை அரசு உடன் ஆரம்பிக்க இவ்வறிவிப்பு அரசுக்கு அழுத்தம் கொடுக்கிறது என ஏ. எப். பி. செய்தியாளர் அமால் ஜெயசிங்க பி. பி ஸிக்கு தெரிவித்தார்.

வடபகுதிக்கு சென்றுபார்த்தால் அவர்கள் அங்கு தனியாக பொலிஸ், வங்கி, நீதிமன்று என ஒரு தனிநாட்டிற்கான சிவில் நிர்வாகத்தை சிறப்பாக மேற்கொள்கின்றனர் இந் நிலையில் அவர்கள் தனிநாட்டிற்கு மாற்றுத் திட்டம் என இப்போது கூறியிருப்பது குறித்து புரிந்து கொள்ள முடியாதுள்ளதாகவும் அமால் ஜெயசிங்க கூறினார்

சமாதான பேச்சுக்கள் மூலம் அவர்கள் எதை அடைய முயல்கின்றனர் என்பதை அறிவது கடினமே எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இப்போது பேச்சு வார்த்தைக்கு வந்தது பலவீன நிலையில் இருந்தல்ல ஒரு

(6ஆம் பக்கம் பார்க்க)

## பிரதி அமைச்சர் வீரவன்னி' நீதிமன்றம் பிணை மறுப்பு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் பிரதிஅமைச்சர் சமரவீர வீரவன்னிக்கு பதுளை நீதிமன்றம் தொடர்ந்து பிணை மறுத்துள்ளது.

சென்ற பொதுத்தேர்தலின் போது பதுளைப் பகுதியில் சூட்டின் விக்கிரமரட்னா கொலை செய்யப்பட்டமை தொடர்பாக இவர் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பாணை 3.50க்கு விற்பதாயின் பாதுகாப்பு வரியை நீக்க பேக்கரிகள் கோரிக்கை

பாதுகாப்பு வரியை நீக்குமாறு கொழும்பில் பேக்கரி உரிமையாளர் சங்கம் அரசைக் கோரியுள்ளது.

பொதுமக்களிற்கு தொடர்ந்து பாணை மூன்று ரூபா 50 சதத்திற்கு வழங்குவதாயின் தம்மீது அறவிடப்படும் பாதுகாப்பு வரி மூன்று வீதத்தை நீக்க வேண்டும் என்றும் இதன் மூலம் பேக்கரி உரிமையாளர் அடையும் நட்டத்தை தவிர்த்துதொடர்ந்து பாணை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்



கப்டன் மயூரன்

யாழ் மாவட்டத்தில் கடந்த 19-ம் திகதி சுகவீனம் காரணமாக ஒரு விடுதலைப்புலிகள் போராளி மரணமடைந்துள்ளார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

# 30க்கு மேற்பட்ட கடற்படையினர் கப்பல் மூழ்கடிப்பில் பலியாயினர்

### பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

சாகரவர்த்தனா கடற்படைக் கப்பல் மூழ்கடிக்கப்பட்ட போது 30க்கு மேற்பட்ட கடற்படையினர் பலியானதாக நம்பப்படுகிறது என கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

சம்பவம் தொடர்பாக விசாரணைகள் பூர்த்தியாகாததாலும் தேடுதல் நடவடிக்கை முடிவடையாததாலும் பலியான படையினரின் சரியான தொகை தெரியவரவில்லை எனவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. இதனால் பலி

[6ஆம் பக்கம் பார்க்க)

# மின்னல் வேகத்தில் வந்த படகுகள் கப்பலுடன் மோதியதும் வெடித்தன

### உயிர் தப்பிய சிப்பாய் தகவல்

(கொழும்பு)

''மின்னல் வேகத்தில் வந்த இரு படகுகள் எமது கப்பல் மீது மோதி பாரிய சத்தத்துடன் வெடித்துச் சிதறின. இதனையடுத்து எமது கப்பல் பக்கவாட்டாக சரிந்து தாழத் தொடங்கியது.''

இவ்வாறு கற்பிட்டி கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் கடற் கரும் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி மூழ்கடிக்கப்பட்ட சிறிலங்காவின் போர்க்கப்பலில் இருந்து மயிரிழையில் உயிர் தப்பிய கடற்படையைச் சேர்ந்த ஒருவர் கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

மேற்படி தாக்குதல் குறித்து மேலும் விபரித்த அவர் மின்னல் வேகத்தில் விடுதலைப் புலிகள் இத் தாக்குதலை நடத்தி முடித்ததால் தம்மால்

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி தேர்தலில் றோகணவின் மைத்துனர்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜே. வி. பி. சார்பில் போட்டியிடுவதற்கு றோகண விஜேவீரவின் மைத்துனர் டாக்டர் சந்திரா பர்ணான்டோ லண்டனில் இருந்து கொழும்பு வந்துள்ளார்.

நேற்று முன் தினம் கட்டு

(6ஆம் பக்கம் பார்க்க)

## விசேட கலந்துரையாடல்

சகல திணைக்களத் தலைவர்களுக்குமான ஒரு விசேட கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை காலை பத்து மணிக்கு நாவலர் மண்டபத்தில் இடம்பெறும்; திணைக்களத் தலைவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளும்படி தமிழீழ நிர்வாக சேவையினர் கேட்டுள்ளனர்.

## அரச வைத்தியசாலைகளில் தனியார் பாதுகாப்பு சேவை விலக்கிக்கொள்ள முடிவு

(யாழ்ப்பாணம்)

அரச வைத்தியசாலைகளில் சேவையாற்றும் தனியார் பாதுகாப்புச் சேவையை நிறுத்தி மீண்டும் அரச உத்தியோகத்தரிடம் கையளிக்கவுள்ளதாக சுகாதார அமைச்சர் ஏ. எம். எம். பௌசி தெரிவித்துள்ளார்.

தனியார் பாதுகாப்புச் சேவையில் சேர்ந்த அரசாங்க வைத்தியசாலைகளில் பணியாற்றும் 50 வீதமான ஊழியர்களின் சேவையை உடனடியாக ஐப்பசி மாதத்தில் இருந்து நிறுத்தப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## வரி விளம்பரம்

### பாலர் ஆசிரியராகலாம் ...

கடைசித்தகைமை க.பொ.த. (சா/த) சனி, ஞாயிறு வர முடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம். விரைவில் ஆரம்பம். பாலர் ஆசிரியர் சங்கம், 73, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். (9449)

### கண்டெடுக்கப்பட்டது

திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் 1 கட்டு வெற்று உரப்பை திருநெல்வேலி வர்த்தக பாதுகாப்பு சேவையினரால் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரிமையாளர் பாதுகாப்பு சேவையினருடன் பி.ப 2மணி தொடக்கம் காலை 6மணி வரை தொடர்புகொள்ளவும். திருநெல்வேலி வர்த்தகர் பா. சேவை (9477)

### தேவை

நடனமுருகன் வைத்திய நிலையத்தில் தாதியாக கடமையாற்றக்கூடிய, பெண்பிள்ளை ஒருவர் தேவை. யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது. நடனமுருகன் வைத்திய நிலையம், சத்திரச்சந்தி, யாழ்ப்பாணம். (9481)

### பிரிமா புறொயிலர் குஞ்சுகள்

10 நாட்கள் வளர்ச்சியடைந்த பிரிமா புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்குண்டு தொடர்பு:- சி. குலசிங்கம் இல. 9, றக்கா வீதி, (BARக்குமுன்பாக) யாழ்ப்பாணம். (9478)

### கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய்ச் சந்தைப் பகுதியில், கடந்த ஞாயிறன்று, புடவையொன்று கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

### ஆங்கில போதனாசிரியர்

# போருக்கு முடிவு காண்பது அரசின் முக்கிய நோக்கம்

- இந்திகா குணவர்த்தனா

(கொழும்பு)

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதே பொ.ஐ. முன்னணியின் முக்கிய நோக்கமாகும். இவ்வாறு பொ.ஐ. முன்னணி அமைச்சர்களில் ஒருவரான இந்திகாகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஊழல், மோசடிகள் நடைபெறாமல் இருப்பதற்கான நடவடிக்கைகள் அரசினால் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டு வருகின்றன.

நாட்டில் கடந்த காலங்களில் ஊழல், மோசடி, ஆயுத கொள்வனவில் தரகு பெற்றமை போன்றவற்றை செய்தவர்களிற்கு எதிராக விசாரணைக்குழுக்கள் அமைக்கப்பட்டு விசாரணைகள் தீவிரமாக முடுக்கி விடப்பட்டுள்ளதாகவும் குற்றவாளிகளுக்கு எதிராக பொது நிதியை துஷ்பிரயோகம் செய்தவர்களிற்கு எதிராக நடவடிக்கை எடுத்து நாட்டில் ஊழல், மோசடி இல்லாத ஒரு நிர்வாகத்தை கட்டி எழுப்ப பொ.ஐ. முன்னணி திட சங்கற்பம் கொண்டுள்ளது எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# பாதுகாப்பு செயலர் மீது அதிகாரி கண்டனம்

(கொழும்பு)

கடந்த பொதுத்தேர்தலின் போது பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேர்தல் இணைப்பாளர்களாக உதவி புரிந்த ஓய்வுபெற்ற மூத்த படை மற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்படி பொலிஸ்மா அதிபரையும் படை அதிகாரிகளையும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் உத்தர விட்டது தொடர்பாக ஓய்வு பெற்ற சில அதிகாரிகள் அவர் மீது கடும் கண்டனம் வெளியிட்டுள்ளனர்.

இரு ஓய்வுபெற்ற விமானப் படை தளபதிகளும், கடற்படைத்தளபதி ஒருவரும், இராணுவ அதிகாரி ஒருவரும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு இக்கண்டனத்தை தெரிவித்துள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் வனசிங்காவுக்கும் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கும் இடையிலான முறுகல் நிலையின் ஒரு கட்டமாகவே இவ்வதிகாரிகளின் கண்டனம் வெளிவந்துள்ளது.

# சப்பிரகமுவா மாகாணமும் பொலிஸ் படை கேட்கிறது

மாகாணபொலிஸ் அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கே வழங்கப்பட வேண்டும் என்று சப்பிரகமுவா மாகாண சபையும் வேண்டுகோள் விடுத்துள்ளது. ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க விடம் இம் மாகாண முதல்வர் எச். ஆர். புஞ்சிநிலமே இதற்கான வேண்டுகோளை விடுத்துள்ளார். இம் மாகாண சபையின் அதிகாரம் ஐ.தே.கவிடம் இருப்பது குறிப்பிடத்தக்கது.

மாகாண சபையின் கூட்டமொன்றில் முதல்வர் புஞ்நிலமே இதற்கான பிரேரணையை முன்மொழிந்ததாகவும். மாகாண சபை உறுப்பினர் சரத் பண்டார இதனை வழிமொழிந்ததாகவும் கூறப்படுகிறது. இப்பிரேரணை வாக்கெடுப்பிற்கு விடப்பட்ட போது 13 உறுப்பினர்கள் ஆதரித்து வாக்களித்ததாகவும் சுதந்திரக் கட்சியின் 4 உறுப்பினர்கள் பிரேரணையை எதிர்த்துவாக்களித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இத் தீர்மானம் தொடர்பாக முதல்வர் புஞ்சிநிலமே ஏற்கனவே ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சைக்கிள் ஓட்டப் போட்டி

அளவெட்டி அருணோதயக் கல்லூரி, நூற்றாண்டு

## விற்பனைக்கு

சகல அளவுகளிலும் பொலித்தீன் தாள், சொப்பிங் பேக், நயிலோன் கயிறு, பிளாஸ்ரிக் யொக், பிளாஸ்ரிக் வாட்டர் யொக், பிளாஸ்ரிக் பேசன், கோழிக்கூடு வலை, அல்மெனியம், தாச்சி, எனாமல் பெயின்ற் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு.

நாதன் களஞ்சியம்,
213, கேணல் கிட்டு சாலை,
மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

(9465)

மானிப்பாய் கோவில்பற்று வணிகர் கழக பிரதேசத்திற்குட்பட்ட சகல துறை வணிகர்களுக்கும் ஊழியர்களுக்கும் விடுக்கும்

## முக்கிய அறிவித்தல்

எம் மண்ணின் விடிவிற்காக உண்ணா நோன்பிருந்து ஈகச்சாவடைந்த

### தியாகி லெப். கேணல் திலீபன்

அவர்களின் 7-ம் ஆண்டு நினைவின் 9-ம் நாளினை சிறப்பிக்கும் முகமாக நாளை 23-9-94 வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு ஆனைக்கோட்டை மூத்த வினாயகர் வீதியில் அமைக்கப்பட்டுள்ள விசேட பந்தலில் மேற்கொள்ளவிருக்கும் அடையாள உண்ணாவிரதத்தில் மானிப்பாய் கோவிற்பற்றுக்கு உட்பட்ட சகலதுறை வணிகர்களையும், ஊழியர்களையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

முக்கிய குறிப்பு:-

வணிகர்கள் நாளை (23-9-94) தங்கள் வணிக நிலையங்களை முழுமையாகப் பூட்டி காலை 7.30 மணிக்கு உண்ணாவிரதத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(9479) -செயலாளர்

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்

28. 11. 1969

மண்ணுக்காக

23. 09. 1990

## நினைவு கூருகின்றோம்...

### 22-09-1994

1984-ம் ஆண்டு இதே தினத்தில் மட்டு - களுவாசிக்குடி சிறிலங்கா காவல் நிலையத் தாக்குதலின் போது வீரச்சாவெய்திய,

லெப். ராஜா (இராமலிங்கம் பரமதேவா-மட்டு)
ரவி (தம்பையா வாமதேவன் - கொக்கட்டிச்சோலை -மட்டு)

1985-ம் ஆண்டு மட்டு - புல்லுமலைப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினரின் சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய, புல்லுமலைப் பிரதேசப் பொறுப்பாளரான,

ராஜேஷ் (இராசையா ஜெகநாதன் - கல்முனை 02 -அம்பாறை)

சிறிலங்காப் படையினரால் கைதாகி, மட்டுநகர் காவல் நிலையத்தில் கொலை செய்யப்பட்டு எமைப் பிரிந்த,

★ ஜேசு (பி. ஜேசுதாசன் - வந்தாறுமூலை -மட்டு)

1988-ம் ஆண்டு யாழ். இணுவில் வைத்தியமனைக்கு முன்னால் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

பொன்னுத்துரை கணேசமூர்த்தி (பாலாவோடை, உடுவில் கிழக்கு - யாழ்)

1990-ம் ஆண்டு மண்டைதீவு முகாமிலிருந்து யாழ் - கோட்டைப் பகுதி நோக்கி சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய,

லெப். சுமன் (முருகையா ஆனந்தன் - நல்லூர் குறுக்கு வீதி- யாழ்)

யாழ்- கோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

சுதர்சன் (ஆறுமுகம் ஆனந்தராசா - கல்லூரி வீதி, இளவாலை - யாழ்)
சத்தியன் (பெரியண்ணன் ஜெயராசா - அம்பன் குடத்தனை, வடமராட்சி கிழக்கு)

1991-ம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

திவாகர் (மாணிக்கம் மகேஸ்வரன் - துறைநீலாவணை - மட்டு)
மனோச் (கண்டுமணி அருள் - மூதூர் - திருமலை)
2-ம் லெப். சரத் (செபஸ்தியாம்பிள்ளை அற்புதராசா -மணற்குடியிருப்பு - முல்லைத்தீவு)
ஜெனந்தினி (செல்வராணி விநாயகமூர்த்தி - 2ம் வட்டாரம் முள்ளியவளை)
நிமால் வேங்கையன் (தங்கவேல் சிவானந்தன் - நைனாமடு - நெடுங்கேணி)
2-ம் லெப். நியூட்டன் (சோமசேகரம் ராஜயோகம் ஓமந்தை - வவுனியா
2-ம் லெப். குபீர் -இளங்குட்டுவன் (ஆனந்தராசா வினோதராசா 154 ம் கட்டை - கிளிநொச்சி)
ரூபமதி (வசந்தி மகாலிங்கம்-முழங்காவில் மன்னார்)
கப்டன் டானி (சின்னத்துரை வசந்தகுமார் - உடுத்துறை தாளையடி - வடமராட்சி கிழக்கு)
கப்டன் விக்ரம் (செல்லத்துரை உதயகுமார் மிருசுவில் தெற்கு - கொடிகாமம்)

யர் பயிற்சி நெறியிற் போதனாசிரியர்களாகப் பணிபுரியப் பொருத்தமானோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஒக்டோபர் மாதம் இரண்டாம் வாரமளவில் மகரகம தேசியக் கல்வி நிறுவகத்தில் நடைபெறவுள்ள குறுங்கால அறிவுறுத்தல் அமர்வுக்கு அனுப்பும் பொருட்டு தகைமையுள்ள ஆங்கில ஆசிரியர்களைத் தமது வலயக் கல்விப் பணிப்பாளர்கள் இம்மாதம் 27ஆம் திகதிக்கு முன் சுயவிபர தகவல்களுடன் விண்ணப்பஞ் செய்யலாம் என யாழ்ப்பாணம் கல்வித்திணைக்களச் செய்திக் குறிப்பு ஒன்று தெரிவித்துள்ளது. ஆங்கில ஆசிரிய நியமனம் பெறத் தகுதியுடையோருக்கு இந்நெறி 1995 ஜனவரியில் ஆரம்பிக்கப்பட இருப்பது தெரிந்ததே.

## இளம் பெண் மரணம்

(வடமராட்சி)

வல்லிபுர ஆழ்வார் ஆலய தீர்த்த உற்சவத்திற்கு கடந்த திங்களன்று சென்ற இளம் பெண் ஒருவர் மயக்கமுற்று பின்னர் மரணமானார்.

வல்வெட்டித்துறை மீனாட்சி அம்மன கோவிலடியைச் சேர்ந்த விஜயகுமார் சுகந்தினி (19) என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

இவர் தீர்த்தக் கடற்கரைக்குச் சென்று திரும்பி வந்துகொண்டிருந்த போது மயக்கமுற்று விழுந்தார். பின்னர் பருத்தித்துறை இலங்கை செஞ்சிலுவைச் சங்க தொண்டர்கள் இவரை அவசர அவசரமாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்து வந்த போதிலும் இடையில் மரணமானார்.

(யோ)

---

...முன்னிட்டு நடாத்தும் ''ஆண்களுக்கான 25 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டி''

காலம்: **01 . 10. 1994** சனிக்கிழமை
காலை 6.30 மணி

இடம்:- அளவெட்டியிலுள்ள அருணோதயக் கல்லூரி வாயில்

பிரவேசக் கட்டணம்:- ரூபா 50/-

விண்ணப்ப முடிவுத்திகதி:- 28.09.1994

தொடர்பு கொள்க:-

**அருணோதயக் கல்லூரி**
(தற்போது இராமநாதன் கல்லூரியில்)
மருதனார்மடம்.

இ. யோ. லெஸ்லி
அமைப்பாளர்.

(9484)

---

## நெல்லியடி வாணிபர் கழகம், கரவெட்டி

எம் மக்களினதும், மண்ணினதும் விடிவுக்காக தன்னுயிர் ஈந்த தியாகச் சுடர் லெப். கேணல் திலீபன்.

அன்னாரின் ஏழாம் ஆண்டு நினைவாக நடைபெறும் அடையாள உண்ணா விரத நிகழ்வுகளின் 9ம் நாளினை சிறப்பிக்கும் முகமாக, 23-09-1994 வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிக்கு துன்னாலைகலிகை கந்தசாமி கோயில் முன்றலில், நெல்லியடி வாணிபர் கழகத்தின் சார்பில், அனைத்து வாணிபர்களையும், ஊழியர்களையும் பொதுமக்களையும் உணர்வு பூர்வமாக கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

குறிப்பு:- 23.09-94 வெள்ளிக்கிழமை அன்று நெல்லியடி வாணிபர்கழக எல்லைக்குட்பட்ட அனைத்து வர்த்தக நிறுவனங்களும் மூடப்பட்டு, உண்ணா நோன்பில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

செயலாளர்
நெல்லியடி வாணிபர் கழகம்,
கரவெட்டி.

(5898)

---

**வீரவேங்கை அலிப்**
**பொ. அன்ரன் டென்சில் (ராஜா)**
(யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவன்)

''இறைவனை நேசித்தாய், வாழ்வில்
இளைஞரை நேசித்தாய்
ஈற்றில் இம்மண்ணை நேசித்தாய்
ஈழ மண்ணுக்காய் உயிர் நீத்தாய்''

- குடும்பத்தினர்

70/6 பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.

(9483)

---

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

மழலையாக
5-10-1971



மாவீரனாக
22-09-1991

**கப்டன் டானி - வரதன்**
சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படைப் பிரிவு
(சின்னத்துரை வசந்தகுமார்)

எரிகின்ற தாயகத்திற்கு பசுந்தளிராய் உதித்தவனே.
வீறு கொண்டெழுந்து வேங்கையாகி
'கப்டன் டானி' நீ வித்தாகி விட்டாய்.
வீரம் செறிந்து கொண்டிருக்கும் மண்ணிலே ... ...

22-9-94 இன்று இவரது இல்லத்தில் நடைபெறும் நினைவு நிகழ்வில் சகபோராளிகள், உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

உடுத்துறை, வேம்படி
தாளையடி.

— குடும்பத்தினர்

(9457)

---

வில் தெற்கு - கொடிகாமம்)

**2-ம் லெப். சங்கீதா** (வசந்தகுமாரி நடராசா- நவாலி வடக்கு, மானிப்பாய்- யாழ்)

**2-ம் லெப். சனத்** (செபஸ்தியாம்பிள்ளை ஜெயசீலன் - கட்டைக்காடு, முள்ளியான் -வடமராட்சி)

**கருணை-திருமால்** (இராசா கண்ணன்-சுதுமலை தெற்கு, மானிப்பாய்-யாழ்)

**வினோத்** (இராசையாயுவராஜா-வதிராயன்வடக்கு, தாளையடி-வடமராட்சி)

**தர்மிலா** (மாலா மயில்வாகனம்-ஆழியவளை, தாளையடி-வடமராட்சி)

**சுமங்கலி** (மல்லிகா விஜயரட்ணம்-சங்கத்தார்வயல்-இயக்கச்சி)

**ரஜனி ராஜினி** (குயின் பத்மா தியாகராசா-இராசாவின்தோட்டவீதி-யாழ்)

மட்டு-கஞ்சிகுடிச்சாறுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

**சுபாஸ்** [விவேகானந்தன் விவேகரட்ணம்-கோமாரி-அம்பாறை)

**சிறி** (கதிர்காமத்தம்பி ஆனந்தராசா - இருதயபுரம் -மட்டு]

1993-ம் ஆண்டு மட்டு-அம்பாறை, செம்பிமடுப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**லெப்.கவுண்டன்** [பொன்னையா தர்மலிங்கம்-மன்னம்பிட்டி-மட்டு]

**ஜனகன்** ...ண்ணமுத்து வாமதேவன்-பனிச்சங்கேணி-மட்டு[

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும், கடற்பரப்பிலும் சிறிலங்காப்படையினரால் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்.

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**


★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10383)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
[illegible] நூலகம்.

# விஞ்ஞானம் O/L



# மாணவர் அரங்கு

## பகுதி A

### இரசாயனக் கைத்தொழில்கள்

1) இலங்கையில் நடைபெறும் சில இரசாயன கைத்தொழில்கள் எவை?
   1) சுண்ணாம்பு தயாரிப்பு
   2) சீமெந்து தயாரிப்பு
   3) எரிசோடா தயாரிப்பு
   4) கறியுப்பு தயாரிப்பு
   5) சவர்க்கார தயாரிப்பு என பல கைத்தொழில்கள் நடைபெறுகின்றன.

(சில பாடத்திட்டம் காணப்படாது இருக்கலாம் அவற்றில் பெரிய அளவில் இங்கு குறிப்பிடப்படமாட்டாது. ஆரம்ப விடயங்கள் மட்டும் தரப்படும் )

### A- சுண்ணாம்பு தயாரிப்பு

1) சுண்ணாம்பு தயாரிப்புக்கு பயன்படும் மூலப் பொருளையும் அது கொண்டுள்ள இரசாயன சேர்வைகளையும் தருக?
சுண்ணாம்புக்கல் / சிப்பி – கல்சியம் காபனேற்று [Ca $Co_3$]
2) சுண்ணாம்பு தயாரிப்பின் போது நடைபெறும் தாக்க சமன்பாட்டைத் தருக?
$CaCO_3$ <–> Ca O + $CO_2$
3) நீறிய சுண்ணாம்பு, நீறாத சுண்ணாம்பின் இரசாயனப் பெயரையும் குறியீட்டையும் தருக?
நீறாத சுண்ணாம்பு – CaO – கல்சியம் ஒக்சைட்டு
நீறிய சுண்ணாம்பு – $Ca(OH)_2$ கல்சியம் ஐதரோக்சைட்டு
4) இலங்கை முறையில் உள்ள குறைபாடுகள் எவை?
   i) சுண்ணாம்புடன் கரி சாம்பல் கலத்தல்
   ii) $CO_2$ விரயமாக்கப்படல்
   iii) முழுக் கல்சியம் காபனேற்றும் பிரிகையடையாமை
   iv) வெப்பம் விரயமாக்கப்படல்

### B- எரி சோடா தயாரிப்பு

I) எரிசோடாவின் இரசாயனப் பெயரையும் அதன் குறியீட்டையும் தருக?
சோடியம் ஐதரோக்சைட்டு NaOH
II) இது எம் மூலப்பொருளில் இருந்து எவ்வாறு தயாரிக்கப்படுகிறது?
கறியுப்பு (சோடியம் குளோரைட்டு - NaCl) கரைசலை மின்பகுத்து பெறப்படுகிறது.
III) இலங்கையில் எவ்வகையான மின்பகுப்பு கலம் இதற்கு பயன்படுத்தப்பட்டது? அதற்கான காரணம் யாது?
1) மென்தகட்டுக்கலம்
காரணம் :- 1) அமைப்பதற்குரிய உற்பத்திச் செலவு குறைவு
2) குறைந்த மின்னழுத்தம் (3.5V )ல் இயங்கும்.
IV) இக்கலத்தின் அனோட்டு, கதோட்டுக்களைத் தருக?
   1) காபன் கோல் – அனோட்டு
   உருக்குவலை – கதோட்டு
V) அனோட்டில் நடைபெறும் தாக்கம் யாது?

4) கரைதிறன் குறைந்த உப்பு முதலிலும் கரைதிறன் கூடியவை பின்பும் வீழ்படிவாகும்.
5) i) முதலில் $CaCO_3$ வீழ்படிவாகும் இது $Ca(HCO_3)_2$ கல்சியம் இருகாபனேற்றாக கடல் நீரில் காணப்படும்
   ii) இரண்டாவதாக $CaSO_4$ வீழ்படிவாகும் (பரீட்சையில் $CaCO_3$ தரப்படாவிடில் $CuSO_4$ முதலில் படியும் எனக் கொள்க)
   iii) மூன்றாவதாக NaCl-ம் நான்காவதாக $MgSO_4$ வீழ்படிவாகும்.
6) இவ்வாறு பெறப்படும் கறியுப்பில் பிரதான மாசுக்களாக $MgCl_2$, Ca $I_2$ என்பன காணப்படும். இவை நீராவியை உறிஞ்சக்கூடியவை. இதனாலேயே கறியுப்பு கசிகிறது
7) உப்பளங்களில் உப்பு மழைநீரில் நனைய விடப்பட்டு கரைதிறன் கூடிய மாசுக்கள் அகற்றப்படும்.
8) உப்பளம் அமைப்பதற்குரிய இடம் பின்வரும் இயல்புகளைக் கொண்டிருக்கவேண்டும்
   1) தட்டையான களிமண் தரை
   2) பரந்த சூரிய ஒளி கிடைக்கக்கூடிய இடம்
   3) காற்றோட்டம் உள்ள இடம்

(9) கறியுப்பின் உபயோகங்கள்

(1) NaOH (எரிசோடா) தயாரிப்பில் மூலப் பொருளாக
(2) $H_2$ $Cl_2$ பெரும்படித்தயாரிப்பிற்கு
(3) உணவை சுவையூட்டவும் பாதுகாக்கவும்
(4) மட்பாண்டங்களை மெருகிட
(5) தோலைப் பதனிட
(6) சவர்க்காரத் தயாரிப்பில் வீழ் படிவாகாத சவர்க்காரத்தை வீழ் படிவாக்க

சீமேந்து தயாரிப்பு

(1) மூலப்பொருள் - அவற்றில் உள்ள இரசாயனப் பதார்த்தம்

| | |
|---|---|
| சுண்ணாம்புக்கல் | - $CaCO_3$ |
| களிமண் | -$SiO_2$, $Al_2O_3$ |
| ஜிப்சம் | - $CaSO_4$ |

(2) களிமண்ணும் சுண்ணாம்புக்கல்லும் முறையே 1 ; 4 என்ற விகிதத்தில் சேர்த்து அரைத்து உருளும் உலையூடாக செலுத்தி கிளிங்கர் பெறப்படும். கிளிங்கர் ஒரு சிக்கலான சேர்வை
(3) 97% கிளிங்கருடன் 3% ஜிப்சம் சேர்த்து அரைத்து சீமேந்து பெறப்படும்.
(4) கிளிங்கரில் முக்கல்சியம் சிலிக்கேற்று, இரு கல்சியம் -சிலிக்கேற்று என்பன காணப்படும்.
(5) ஜிப்சம் இறுகும் வீதத்தை குறைத்து நேரத்தை கூட்ட பயன்படும்.

## பகுதி B

### இயைபாக்கமும் சம நிலையும் தொடர்ச்சி

(16) நரம்பு எதனால் ஆக்கப்பட்டது?
நரம்புக்கலத்தால்
(17) நரம்புக் கலங்களின் வகைகளைத் தருக?
(1) புலன் நரம்புக்கலம்

### (27 - 29)ம் வினாவரை இப்படத்தை பயன்படுத்துக

27) 2, 3, 5 ஒவ்வொன்றும் எவ்வகையான நரம்புகள் எனக் கூறுக.
   2 — கலப்பு நரம்பு (உட்காவு / வெளிக்காவு நரம்பாக தொழிற்படல்)
   3 – உட்காவு நரம்பு
   5 – வெளிக்காவு நரம்பு
28) A, B என்பன என்ன நிறமாக தோன்றும்?
   A — நரைநிறம்
   B — வெண்ணிறம்
(29) தெறிவில்லில் 2, 3, 5 என குறித்த பகுதிகளில் துண்டிப்பு ஏற்பட்டால் யாது நடக்கும் என காரணத்துடன் கூறுக?
   (1) 2ல் துண்டிப்பு ஏற்பட்டால் தூண்டலை உணர முடியாது அத்துடன் விளைவு காட்டியும் இயங்காது. [உட்காவு வெளிக்காவு நரம்புக்கலம் துண்டிக்கப்படுவதனால்]
   [2] 3ல்துண்டிக்கப்பட்டால் தூண்டலை உணர முடியாது விளைவு காட்டி இயங்கக்கூடியதாக இருக்கும் (உட்காவு நரம்பு மட்டும் துண்டிக்கப்படுவதால் செய்தி மூண்ணாணை அடையாது)
   (3) 5ல் துண்டிப்பு ஏற்பட்டால் தூண்டலை உணரலாம் விளைவு காட்டி இயங்காது [இயக்க நரம்புக்கலம் துண்டிக்கப்படுவதனால் செய்தி விளைவு காட்டிக்கு செல்லாது]

## பகுதி C

### வெப்பமானி தொடர்ச்சி

A) (1) வெப்பமானித்திரவமாக இரசம் பயன்படுத்தப்படுகிறது.
(2) வெப்பமானித் திரவமாக இரசத்தைப் பயன்படுத்துவதற்குரிய காரணங்கள்.
   1) சீரான விரிவுடையதாக காணப்படல்
   2) எளிதிற் கடத்தியாக தொழிற்படல்
   3) உயர்ந்த கொதிநிலையும் தாழ்ந்த உறைநிலை உடையதாக காணப்படல்
   4) கண்ணாடியை நனைக்காது காணப்படல்
   5) இலகுவில் கண்ணிற்கு புலனாகுதல்

B) (1) உடல் வெப்பநிலை உடல் வெப்பமானியால் அளவிடப்படும்.
   2) உடல் வெப்பமானியின் மயிர்த்துளைக் குழாயில் காணப்படும் வளைவு (சுருக்கு) அதன் சிறப்பம்சம் ஆகும் இது மேலேறிய இரசத்தை தானாக கீழிறங்க விடாது.
   3) உடல் வெப்பமானியின் மேல் நிலைப் புள்ளி 110°F ஆகும். எனவே கொதிநீரில் கழுவக் கூடாது காரணம் கொதிநீரின் வெப்பநிலை 212°F எனவே மேலதிக விரிவு ஏற்பட்டு உடைந்து விடும்.

#### மறை வெப்பம்

(1) சடப்பொருளை வெப்பப்படுத்தும் போது அதன் வெப்பநிலை அதிகரிப்பது அதன் இயல்பாகும். ஆனால் உருகுதல், ஆவியாதல் போன்ற சந்தர்ப்பங்களில் நாம் வெப்பத்தை வழங்கும் போது அதன் வெப்பநிலையில் மாற்றம் ஏற்படாது எனவே வழங்கப்பட்ட வெப்பம் மறைக்கப்படுகிறது எனக்கருதி வெப்பத்தை வழங்கும் போது [illegible]

திரவமாக்க தேவையான வெப்பமாகும்.

உ+ம்
பனிக்கட்டியின் உருகலின் மறைவெப்பம் 336J/g எனில் அதன் கருத்து யாது?
O°C யில் 1g பனிக்கட்டியை O°Cயில் நீராக்க 336J வெப்பம் தேவை.
(பனிக்கட்டியின் உருகுநிலை O°C)

#### ஆவியாதலின் மறைவெப்பம்:-

ஒரு அலகு திணிவுள்ள திரவத்தை அதன் கொதிநிலையில் வெப்பநிலை மாறாது இருக்க முற்றாக வாயுவாக்க தேவையான வெப்பம் ஆவியாதலின் மறை வெப்பமாகும்.

#### மறைவெப்பத்தின் அலகு:-

$JKg^{-1}$

#### மூலர் உருகலின் மறை வெப்பம்

1. ஒரு மூல் திண்மத்தை அதன் உருகுநிலையில் வெப்பநிலை மாறாது இருக்க திரவமாக்க தேவையான வெப்பமாகும்.

உ+ம்
பனிக்கட்டி ($H_2O$)
மூலக்கூற்று நிறை = 2 + 16 = 18
∴ 1 மூல் பனிக்கட்டி = 18g பனிக்கட்டி
பனிக்கட்டியின் உருகலின் மறை வெப்பம் 80 கலோரி/கிராம் எனில் அதன் மூலர் உருகல் மறை வெப்பத்தை J/gல் காண்க?
1 கிராமம் பனிக்கட்டியை உருக்க தேவையான வெப்பம் = 80 கலோரிகள்
∴ 18கிராம் பனிக்கட்டியை உருக்க தேவையான வெப்பம் = 80 × 18 கலோரிகள்
1 கலோரி = 42 யூல்
∴ 18 கிராம் பனிக்கட்டியை உருக்க தேவையான வெப்பம் =80×18× 4. 2J
∴ மூலம் உருகல்மறை வெப்பம் = 80×18×4. 2Jg

#### மூலம் ஆவியாதல் மறை வெப்பம்

1. ஒருமூல் திரவத்தை அதன் கொதிநிலையில் வெப்பநிலை மாறாது இருக்க வாயுவாக்க தேவையான வெப்பம்

குறிப்பு
நீரின் ஆவியாதலின் மறைவெப்பம் 310 கலோரிகள் / கிராம் எனில் மூலர் ஆவியாதல் மறை வெப்பத்தைக் J/gல் காண்க?

சு. அருள்நேசன்

#### உருகுநிலை:-

திண்மம் ஒன்று உருகத் தொடங்கியது முதல் முற்றிலும் உருகும் வரை மாறாது உள்ள வெப்பநிலை அதன் உருகுநிலை ஆகும்.

#### கொதிநிலை:

திரவம் ஒன்று ஆவியாக தொடங்கியது முதல் முற்றிலும் ஆவியாகும் வரை மாறாது உள்ள வெப்பநிலை - கொதிநிலையாகும்.

#### குறிப்பு:

(1) கரிய நிறம் விரைவாக வெப்பத்தை உறிஞ்சும் அதேபோல் விரைவாக வெப்பத்தை இழக்கும்.

#### மாணவர்களின் சிந்தனைக்கு

விஞ்ஞான விளக்கம் தருக?

1) நாம் வெய்யிலில் நின்று வந்த சிறுவனின் தலையையும் உடலையும் தொட்டால் தலையே கூடியளவுசுடும்
2) கோடை காலத்தில் கறுப்பு நிறக்குடையிலும் நிறக் குடையே சிறந்தது?
3) கிரிக்கட் வீரர் வெண்ணிற உடையே அணிகிறார்கள்
4) பால் தேநீரிலும் வெறும் தேநீர் விரைவில் ஆறிவிடும்

$Cl^{-} - e \rightarrow Cl$

$Cl + Cl \rightarrow Cl_2 \uparrow$

VI கதோட்டில் நடைபெறும் தாக்கம் யாது?

$H^{+} + e \rightarrow H$

$H + H \rightarrow H_2$

VII) பக்கவிளைவுகள் எவை?

$H_2$. $Cl_2$

VIII) $H_2$ வின் உபயோகங்கள் எவை?

1) வாயுக்கூண்டுகளை நிரப்ப (வானிலை அவதானத்திற்கு)
2) HCl தயாரிப்பு
$H_2 + Cl_2 \rightarrow 2HCl$
3) ஐதரசன் ஏற்றத்திற்கு (மாஜரீன் தயாரிப்பு) நிரம்பாத கொழுப்புக்களை நிரம்பிய கொழுப்புக்கள் ஆக்க
4) $H_2$ சுவாலையால் உலோகங்களை காச்சி இணைக்க

IX) $Cl_2$வின் உபயோகங்கள் எவை?

1) கிருமி கொல்லியாகவும், கிருமிகொல்லி தயாரிப்பிலும்.
2) HCl தயாரிப்பு
3) வெளிற்றும் தூள் $Ca(OCl)_2$ தயாரிப்பு
$Ca(OH)_2 + Cl_2 \rightarrow Ca(OCl)_2 + CaCl_2 + H_2O$
நீறிய சுண்ணாம்புடன் குளோறின் தாக்கம் புரிந்து வெளிற்றும் தூளான கல்சியம் உபகுளோரைட்டைக் கொடுக்கும்.
4) மில்ரன் தயாரிப்பு NaOCl (சோடியம் உபகுளோரைட்டு)
$NaOH + Cl_2 \rightarrow NaCl + NaOCl + H_2O$
எரிசோடாவுடன் $Cl_2$ தாக்கம் புரிந்து மில்ரனைக் கொடுக்கும்.
5) துணிகளை காகித கூழை வெளிற்ற

X) NaOH இன் உபயோகம் தருக?

1) சவர்க்காரத் தயாரிப்பு
2) மில்ரன் தயாரிப்பு

## C) கறியுப்பு தயாரிப்பு

1) கடல் நீரை ஆவியாக்கி கறியுப்பு தயாரிக்கப்படுகிறது.
2) கடல் நீர் அனேக உப்புக்களைக் கொண்டது அதில் கூடிய அளவில் NaCl (கறியுப்பும்) மிகக் குறைந்த அளவில் $MgBr_2$ (மக்னீசியம் புறோமைட்டும் உண்டு)
3) கடல் நீரில் அனேக உப்புக்கள் காணப்பட்டபோதும் அவை ஒவ்வொன்றும் வெவ்வேறு கரைதிறன் உடையவையாதலினால் வெவ்வேறு நேரங்களில் வீழ்படிவாகும் எனவே குறித்த நேரத்தின் பின் வெவ்வேறு பாத்திகளில் விட்டு ஆவியாக்கி உப்புக்கள் வேறாக்கப்படும்.

(1) புலன் நரம்புக்கலம்
(2) இயக்க நரம்புக் கலம்

(18) நரம்புக் கலத்தின் கரு எங்கே காணப்படும்?
கலவுடலில்

(19) நரம்புக் கலத்தின் கலவுடல் எங்கே காணப்படும் ?
மைய நரம்புத் தொகுதி (மூளை + முண்ணாண்)யிலும் திரட்டுக்களிலும்

(20) நரம்புக்கலத்தின் கலவுடல் காணப்படும் பகுதி எவ்வாறு காணப்படும்?
நரைநிறமாக (மூளையின் நெடுக்கு வெட்டில் வெளிப்பகுதியும் முண்ணாணில் நடுவில் H வடிவில் உள்ள பகுதியும்)

(21) உடலில் ஏற்படும் துலங்கல்களின் வகைகளைத்தருக?
(1) இச்சை வழித்துலங்கல்
(2) இச்சையின்றிய துலங்கல் (தெறிவினை)


(22) தெறிவினை என்றால் என்ன?
தூண்டலிற்கு இச்சையின்றி (எமது விருப்பமின்றி) ஏற்படும் துலங்கலாகும்.

(23) தெறிவினைக்கு சில உதாரணம் தருக?
(1) கண்ணிமைகளின் அசைவு
(2) உமிழ் நீர் சுரத்தல்
(3) முழங்கால் உதறல் தூண்டல் பேறு
(4) சூடான அல்லது கூரான பொருளில் கை அல்லது கால் பட்டதும் திடீரென மடித்தல்

24) தெறிவினையின் பயன் யாது?
ஆபத்தான நேரங்களில் துலங்கல் தாமதமின்றி நடைபெற்று அதில் இருந்து தப்ப வாய்ப்பை ஏற்படுத்துதல்

25) தெறிவில் என்றால் என்ன ?
தெறிவினையின் போது கணத்தாக்கம் செல்லும் பாதை

26) தெறிவில்லின் படம் வரைந்து பெயரிடுக?




1) வாங்கி
2) முண்ணாண் நரம்பு
3) முதுகுப்புற நரம்பு
4) முதுகுப்புறத்திரட்டு
5) வயிற்றுப்புற நரம்பு
6) விளைவு காட்டி
7) புலன் நரம்புக்கலம்
8) இடைத்தூது நரம்புக் கலம்
9) இயக்க நரம்புக்கலம்.

கிறது எனக்கருதி வெப்பத்தை வழங்கும் போது வெப்பநிலையில் மாற்றம் காணப்படாவிடில் வழங்கப்பட்ட வெப்பம் மறை வெப்பம் எனப்படுகிறது.

1) உருகும் போதும் ஆவியாதலின்போதும் வெப்பநிலை மாற்றம் ஏற்படுவதில்லை எனவே இவ்விரு சந்தர்ப்பங்களிலும் மறை வெப்பம் தொழிற்படுகிறது எனப்படும்.
2) உருகலின் போது தொழிற்படும் மறைவெப்பம் உருகலின் மறைவெப்பம் எனவும் ஆவியாதலின் போது தொழிற்படும் மறைவெப்பம் ஆவியாதலின் மறைவெப்பம் எனவும் அழைக்கப்படும்.

## III உருகலின் மறைவெப்பம்

ஒரு அலகு திணிவுள்ள திண்மத்தை அதன் உருகுநிலையில் வெப்பநிலை மாறாது இருக்க முற்றாக

4) பால் தேநீரிலும் வெறும் தேநீர் விரைவில் ஆறிவிடும்
5) அதிகாலையில் யன்னல் கம்பி குளிரும் யன்னல் கதவு குளிராது?
6) பால் காய்ச்சும் போது அது ஏன் பொங்குகிறது?
7) அரிக்கன் லாம்பின் சிமினி இடும் அடித்தட்டில் ஏன் துவாரம் காணப்படுகிறது?
8) கண்ணாடிப் பாத்திரத்தில் நீரை விட்டு குளிரூட்டியில் வைத்து பனிக்கட்டியாக்கும் போது பாத்திரம் ஏன் வெடிக்கிறது?
9) வெப்பக்குடுவையின் அடியில் உள்ள வால்பு உடைந்தால் ஏன் அதனுள் உள்ள சுடுநீர் ஆறுகிறது?

10. எரியும் மேசைலாம்பு சிமினியின் அடியிலும் மேல் பகுதியே கூடியளவு சூடாகக் காணப்படும்.

விளக்கம் அடுத்த அரங்கில் தொடரும்.

# தமிழ் O/L

தமிழில் மொழி முதலில் வரும் எழுத்துக்கள் பற்றிய நன்னூலாரின் இலக்கண விதிகள் இக்காலத் தமிழ் வழக்குக்குப் பொருந்துமா என்பதை ஆராய்க?

தமிழ் எழுத்துக்களில் சிலஎழுத்துக்களேமொழிக்கு முதலில் வரும் தன்மை பெற்றவை. இதனை நன்னூலார் முதல் நிலை என்னும் பகுதியில் கூறியுள்ளார். முதனிலை என்பதன் பொருள் முதன்மையாக நிற்கும் தன்மை வாய்ந்தது என்பதாகும். நன்னூலார் மொழி முதல் வரும் எழுத்துக்களாக பன்னிரண்டு உயிரெழுத்துக்களும் மெய் எழுத்துக்களிலே க் - ச் - த் - ந் - ப் - ம் - வ் - ய் - ஞ் - ங் - ஆகிய பத்து மெய் எழுத்துக்களும் உயிர் எழுத்துக்களுடன் கூடி உயிர் மெய்யாகி மொழிக்கு முதலில் வரும் என்று கூறியுள்ளார்.

''பன்னீருயிரும் க- ச- த- ந- ப- ம- வ- ய ஞ- ங ஈரைந்தும் மெய்யும் மொழி முதல்''

என்று நன்னூலார் சூத்திரம் வகுத்துள்ளார். இதற்கு உரையாளர்கள் உதாரணம் காட்டியுள்ளனர்.

| | |
|---|---|
| அம்மா | ஏணி |
| ஆடு | ஐயர் |
| இலை | ஒட்டகம் |
| ஈட்டி | ஓலை |
| உறி | |
| ஊஞ்சல் | ஔடதம் |
| எலி | |

அத்துடன் பத்து உயிர் மெய்யும் மொழிக்கு முதலில் வருவது பண்டு தொட்டே வழக்காக உள்ளது உதாரணமாக,

| | |
|---|---|
| கத்தி | மலர் |
| சட்டி | வண்டு |
| தண்ணீர் | யவனர் |
| நண்டு | ஞமலி [நாய், ஞாழி] |
| பல் | |

இவ் எழுத்துக்களே மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள் என நன்னூலார் கூறியுள்ளார்.

இவை இக்காலத்து தமிழ் வழக்குக்கு பொருந்துமா என எடுத்து நோக்கும் பொழுது தமிழ் மொழியிலே காலத்துக்குக் காலம் பல்வேறு நாடுகளில் இருந்து பல்வேறு வகையான மொழிகள் தமிழ் மொழியிலே வந்து சேர்ந்து உள்ளன. அரசியல்- கலை- பண்பாடு- வியாபாரம்முதலியதொடர்புகளினால் தமிழ் மொழியிலே திசைச் சொற்களாக வந்து சேர்ந்த சொற்களே நன்னூலார் குறிப்பிட்ட இலக்கண மரபுகளைத் தகர்த்தன எனலாம். இருந்தாலும் நன்னூலார் கூறிப்பிட்டுள்ள மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள் இன்றும் நடைமுறையில் உள்ளன. உதாரணமாக ''ங'' மெய்மொழிக்கு முதலில்வரும் என விதியும் கூறியுள்ளார், இங்கர மெய் அ, இ, உ என்பவற்றுடன் சார்ந்தே.

கிருஷ்ணசாமி கிருபானந்தா

மொழிக்கு முதலில் வரும் என்று கூறினார்.
உதாரணமாக

ங் + அ = அங்ஙனம்
ங் + இ = இங்ஙனம்
ங் + உ = உங்ஙனம்

போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

அடுத்து நன்னூலார் மொழிக்கு முதலில் வராது எனக் குறிப்பிட்ட பல எழுத்துக்கள் இன்று மொழிக்கு முதலில் வருகின்றன.

| | |
|---|---|
| ர - ரஞ்சனி | ல - லத்தி |
| ரா - ராதை | லா - லாபம் |
| ரி - ரிஷி | லி - லிங்கம் |
| ரீ - ரீங்காரம் | லீ - லீலா |
| ரு - ருசி | லு - லுங்கி |
| ரூ - ரூபம் | லூ - லூஸ் |
| ரெ - ரெட்டி | லெ - லெவல் |
| ரே - ரேவதி | லே - லேஞ்சி |
| ரொ - ரொட்டி | லை - லைலா |
| ரோ - ரோகினி | லொ - லொங்கு |

[4-ம் பக்கம் பார்க்க]

# கணிதம் O/L

7-9-94 இல் வெளியான கணித வினாக்களுக்கான விடைகள்

## 6.

| ஈட்டு (x) | மீடிறன் (f) | விலகல் (d) | வி. தொ. (fd) | திரள் மீடிறன் |
|---|---|---|---|---|
| 95 | 03 | −5 | −15 | 03 |
| 96 | 05 | −4 | −20 | 08 |
| 97 | 09 | −3 | −27 | 17 |
| 98 | 12 | −2 | −24 | 29 |
| 99 | 16 | −1 | −16 | 45 |
| 100 | 23 | 00 | 00 | 68 |
| 101 | 17 | 1 | 17 | 85 |
| 102 | 11 | 2 | 22 | 96 |
| 103 | 04 | 3 | 12 | 100 |
| 104 | 00 | 4 | 00 | 100 |
| | 100 | | 51+(-102) | |
| | | | (−51) | |

அ) 1) விலகல் இடை $= \frac{-51}{100}$

$= (-0\ 51)$

உண்மை இடை $= 100 + (-0\ 51)$

$= 99.49$

அண்ணளவாக $= 99$

2) $\frac{32}{100}$

ஆ) 1-ம் காலணை அமைவு $= \frac{n}{4} = \frac{100}{4} = 25$

∴ $Q_1 = 98$

2-ம் காலணை அமைவு $= \frac{n}{2} = \frac{100}{2} = 50$

∴ $Q_2 = 100$

3-ம் காலணை அமைவு $= \frac{3n}{4} = \frac{3 \times 100}{4} = 75$

∴ $Q_3 = 101$

(1) 100 (2) 101 − 98 = 3

7. அ) நடுப்புள்ளித் தேற்றத்திற்கான நிறுவலைக் கொடுக்க வேண்டும். இத் தேற்றம் ஆண்டு 10 பாடத்திட்டத்தில் உள்ளது.

ஆ) படத்தை வரைந்து கொள்ளவும்.

தரவு: PQR ஒரு Δ. QRஇன் நடுப்புள்ளிS. PSஇன் நடுப்புள்ளி T. PQ//XY, PQ//SZ ஆகும்.

நி.வே;- $4XY = 3PQ$

நிறுவல்:- ΔPQR இல் நடுப்புள்ளித் தேற்றப் படி

$PQ = 2SZ$

ΔPSTஇல் ந.பு தே

$2TY = SZ$ ——(1)

ΔPQS இல் ந பு.தே

$2TX = PQ$ ——(2)

(1) + (2) —> $2TY + 2TX = SZ + PQ$

$2(TY + TX) = \frac{1}{2}PQ + PQ$

$2XY = \frac{3}{2} PQ$

$4XY = 3PQ$

50000 : 20000 : 30000

5 : 2 : 3

10% சம்பளம் போக

2) பங்கிடப்பட்ட இலாபம் $= \frac{90 \times 7200}{100}$

$= 6480/-$

செண்பகம் பெறும் வருமானம் $= \frac{5 \times 6480}{10}$

$= 3240/-$

ரோஜா பெறும் வருமானம் $= \frac{2 \times 6480}{10}$

$= 1296/-$

$= 1296/-$

மல்லிகை பெறும் வருமானம் $= \frac{3 \times 6480}{10}$

$= 1944/-$

3) செண்பகம் பெறும் மொத்தப் பணம்

$= 720 + 3240$

$= 3960/-$

ஆ) சிறந்த நிலைக் கார்கள் $= 0.75$

பல நிறக் கார்கள் $= 0.2$

பாவிக்க உகந்தது $= 0.02$

மொத்தம் 0.97

மீதிக் கார்கள் $= 0\ 03$ பங்கு

மொத்த கார்கள் $= \frac{225 \times 100}{3}$

$= 7500$

சிறந்த நிலைக் கார்கள் $= 7500 \times \frac{3}{4}$

$= 5625$

[2] ஒரு மோட்டார் காரின் விலை $= \frac{112}{100} \times 9000$

$= 10080$ அமெரிக்க டொலர்

$= 342720$ இலங்கை ரூபா

## 9.

(அ) (1) $a + 9d = 3$ ---- (1)

$a + 14d = 18$ ---- (2)

(2) − (1) —> $5d = 15$

$d = 3$

d=3ஐ சமன்பாடு (1) இல் பிரதியிட

$a + 9d = 3$

$a + 9 \times 3 = 3$

$a = 3 - 27$

$a = (-24)$

(2) $T_{20} = a + 19d$

$= (-24) + 19 \times 3$

$= (-24) + 57$

$= 33$

(3) $S_n = \frac{n}{2}[2a + (n-1)d]$

$S_{10} = \frac{10}{2}[48 + (10-1)3]$

$= 5[-48 + 27]$

$= 5 \times -21$

$= [-105]$

ஆ) $T_n = 3\ (2)^n$

இது பெருக்கல் தொடர் r=2 ஆ இருப்பதால்

2) $T_5 = 3 \times 2^5$

$= 3 \times 32$

$= 96$

## 10.

அ) கூம்பின் சாய்வு நீளம் $= 24^2 + 7^2$

$= 576 + 49$

$= 625$

$l = 25cm$

1) அரைக்கூம்பின் மேற்பரப்பு =

$\frac{1}{2} \times 14 \times 24 + \frac{1}{2} \times \frac{22}{7} \times 7 \times 7 + \frac{1}{2} \times \frac{22}{7} \times 7 \times 25$

$= 168 + 77 + 275$

$= 520cm^2$

2) கனவளவு $= \frac{1}{2} \times \frac{1}{3} \times \frac{22}{7} \times 7 \times 7 \times 24$

$= 616cm^3$

ஆ) ஒரு கோளத்தின் கனவளவு $= \frac{4851}{27}$

$\frac{4}{3}\pi r^3 = \frac{4851}{27}$

$r^3 = \frac{4851}{27} \times \frac{3}{4} \times \frac{7}{22}$

$r^3 = \left(\frac{7}{2}\right)^3$

$r = \frac{7}{2} = 3\frac{1}{2}$ cm

ல: சதீஸ்குமார்
(ஆசிரியர் உடுவில் மகளிர் கல்லூரி)

## 11.

(1) $\hat{ACB} = 52°$ (ஒன்றுவிட்ட துண்டக் கோணம்)

(2) $\hat{DBA} = 47°$ (ஒன்றுவிட்ட துண்டக்கோணம்)

∴ $\hat{DCA} = 47°$ (வட்டத் துண்டக் கோணம்)

(3) $\hat{BDC} = 47°$ (ஒன்று விட்ட கோணம்)

$\hat{BDA} = 52°$ (வ து. கோணம்)

∴ $\hat{CBA} = 180 - [52° + 47]$ [வட்ட நாற்எதிர்க் கோணம்]

$= 180 - 99$

$= 81°$

(4) $\hat{DAB} = 180 - [47° + 52°]$ [நேர்கோட்டுக்கோணம்]

$= 180 - 99$


$= 81°$

∴ $\hat{CBA} = \hat{DAB}$

∴ EBA ஒரு இருசமபக்க முக்கோணி

(5) $\frac{\triangle ECD}{\triangle EAB} = \frac{DC^2}{AB^2}$

$= \frac{4}{25}$




2) தான் $43° = \frac{AE}{73.72}$

$AE =$ தான் $43° \times 73.72$

$= 0.9325 \times 73.72$

$[\bar{1}.9696 + 1\ 8676]$

$= 10$

$1.8372$


$= 10$

$= 68\ 73m$

∴ மணிக்கூட்டுக் கோபுர உயரம் $= 68.73 + 2.24$

$= 71\ 07$ m

[ஆ] 1)




[2] சைன் $36° = \frac{100}{AC}$

$AC = \frac{100}{\text{சைன் } 36°}$

$= \frac{100}{0.5878}$

$= 170.13m$

[3] தான் $54° = \frac{BC}{100}$

$BC =$ தான் $54° \times 100$

$= 1\ 3764 \times 100$

$= 137.64$ m

## தமிழ்

| | |
|---|---|
| ரை - ரை | லோ - லோஜினி |
| ரௌ - ரௌடி | லௌ - லௌக்கம் |
| ற - றஞ்சனி | ட - டடி |
| றா - றாதிகா | டா - டாம்பீகம் |
| றி - றிபண் | டி - டிமிக்கி |
| றீ - றீற்றா- | டீ - டீட்சர் |
| று - றுக்கு | டு - டுபாய் |
| றூ - றூள் | டூ - டூப் |
| றெ - றெடி | டெ - டெச் |
| றே - றேந்தை | டே - டேவிட் |
| றை - றைபிள் | டை - டைகர் |
| றொ - றொட்டி | டொ - டொபி |
| றோ - றோட் | டோ - டோப் |
| றௌ - றௌடி | டௌ - டௌண் |

இவற்றில் இருந்து நன்னூலார் வாழ்ந்த காலத்து அரசியல் சமூக பொருளாதார பின்னணியின் அமைப்பிலேயே அவர் மொழிக்கு முதலில் வரும்எழுத்துக்கள் பற்றித் தீர்மானம் செய்தார் எனக் கருதலாம் ஆனால் அவற்றுள் சில இன்று பொருந்துவதாகவும் பல பொருத்தமற்றதாகவும் அமைந்து வருகின்றது எனலாம். காலத்துக்குகாலம் ஏற்பட்ட அரசியல் சமூக - பொருளாதார வியாபார காரணத்தினால் அன்னியர்கள் இங்கு வந்து சேர்ந்ததும் அவர்களின் மொழி தமிழ் மொழியுடன் கலந்ததாலும் இந்த நன்

$2XY = \frac{3}{2} PQ$
$4XY = 3PQ$

8.

அ) 1) செண்பகம், ரோஜா, மல்லிகை என்பவர்களின் முதலீட்டு விகிதம்.

ஆ) $T_n = 3 (2)^n$

$n = 1$ ஆக $T_1 = 3 \times 2^1 = 6$
$n = 2$ ஆக $T_2 = 3 \times 2^2 = 12$
$n = 3$ ஆக $T_3 = 3 \times 2^3 = 24$

1) 6, 12, 24 .........

$= \frac{4}{25}$

12.

அ) [1]

சமூக - பொருளாதார வியாபார காரணத்தினால் அன்னியர்கள் இங்கு வந்து சேர்ந்ததும் அவர்களின் மொழி தமிழ் மொழியுடன் கலந்ததாலும் இந்த நன்னூலார் கூறியுள்ள மொழிக்கு முதலில்வரும்எழுத்துக்கள் என்ற நிபந்தனையை மீறிப் பல மொழிக்கு முதலில் வராத சொற்களும் தமிழ்மொழிக்குமுதலில் வரத் தொடங்கி உள்ளனஎனலாம்.

# ஜனாதிபதி தேர்தலிலும் நான் வெற்றியை ஈட்டுவேன்

## காமினி திசாநாயக்க நம்பிக்கை

(கொழும்பு)

எல்லா தேர்தல்களிலும்இதுவரை நான் வெற்றியீட்டியுள்ளேன். எனவே எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலிலும் நானே வெற்றியீட்டுவேன் இதில் எந்தவிதசந்தேகமும் கிடையாது என எதிர்க் கட்சி தலைவர் காமினி திசாநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி வேட்பாளராக ஐக்கியதேசியக்கட்சியின்உத்தியோக பூர்வமான அறிவிப்பு வெளியான பின்னர் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் இக்கருத்தை தெரிவித்துள்ளார். அரசியலில் துறவறம் பூண்டவர்கள் மீண்டும் அரசியலில் பிரகாசிப்பதற்கானமுயற்சிகளைமேற்கொள்வதாகவும் இதனை மக்கள் ஏற்றுக் கொள்ள போவதில்லை எனவும் தெரிவித்தார்.

எனது அரசியல் வாழ்வில் இதுவரை நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்ட எல்லாத் தேர்தல்களிலும் தான் வெற்றி பெற்றதாகவும் தான் தோல்வியை என்றுமே சந்திக்கவில்லை இனிமேலும் மக்கள் நம்பிக்கை தன் வசம் இருப்பதனால் சந்திக்க போவதில்லை என்றும் தெரிவித்தார்.

# தொலைபேசி, நெடுஞ்சாலை உடன் செப்பனிடப்படும்

## - அனுருத்த ரத்வத்த

(கொழும்பு)

பேச்சுவார்த்தைகள் வெற்றியளித்ததும் வடபகுதிக்கான அபிவிருத்தி வேலைகள், உலக வங்கி, மற்றும் ஏனைய வெளிநாட்டு அமைப்புகளின் உதவியுடன் துரிதமாக மேற்கொள்ளப்படும் என பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார்.

மின்சாரம், நீர்ப்பாசனம் என்பவற்றை வழங்குவதற்கான திட்டங்கள் தயாராகி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் வடபகுதிக்கான அபிவிருத்தி வேலைகளில் ரயில் சேவை ஆரம்பமாவது தாமதமாகவே நடைபெறும் வவுனியாவிலிருந்து காங்கேசன்துறை வரையிலான ரயில் தண்டவாளங்கள் மீள போடவேண்டியும், மதகுகள் திருத்தப்படவேண்டியும் இருப்பதனால் இத்தாமதம் ஏற்படும் எனவும், வடபகுதிக்கான தொலைபேசி வசதியும், வவுனியா-யாழ்நெடுஞ்சாலைசெப்பனிடும்பணியும், உடனடி அபிவிருத்தி திட்டங்களில் அடங்கும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்

# இளைஞர் கழகங்கள்

(கொழும்பு)

ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுகளிலும் இளைஞர் கழகங்கள் நிறுவப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான நிதியுதவியை அரசு வழங்கவுள்ளதாக இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் எஸ் பீ. திசாநாயக்கா தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதி தேர்தலில் தமிழ்க் கட்சிகளின் ஆதரவு

## பிரதமர் கோருகிறார்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில், பொதுஜனஐக்கிய முன்னணி வேட்பாளராக போட்டியிடவுள்ள பிரதமர் சந்திரிகா குமாரதுங்க, தமிழ் அரசியற் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களை சந்தித்து ஆதரவு கோரியுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பொதுஜன ஐக்கிய முன்னணி, காலஞ்சென்ற பிரதமர் எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்காவின் சிரார்த்ததினமான இம்மாதம் 26ந் திகதியன்று உத்தியோக பூர்வமாக தனது தேர்தல் பிரசாரத்தை ஆரம்பிக்க உள்ளதாகவும் தெரிய வருகிறது.

வடமாகாண பனை தென்னை வள அ. கூ. ச- சமாசத்தின்

# அனுதாபச்செய்தி

எமது சமாசத்தினதும், யாழ். ப. தெ வ அ. கூ. சங்கத்தினதும் தலைவர் திரு. சா. செல்வரெட்ணம் அவர்களின் அன்பு மாமனார்

## மாணிக்கம் தம்பிப்பிள்ளை யோசப்

அவர்களின் மரணச்செய்தி அறிந்து துயருறுகின்றோம். அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கின்றோம்.

இல 499 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

நிர்வாகிகளும், பணியாளரும்
வடமாகாண தெ. ப. பொ. கூ, சங்கங்களின் சமாசம்.

(சி/10384)

# கண்ணீர் அஞ்சலி

## டாக்டர் எஸ். பொன்னம்பலம்

டாக்டர் பொன்னம்பலம் ஐயாஇறந்ததை அறிந்து ஆழ்ந்த துக்கமடைந்தேன். பாடசாலையில் ஒன்றாகக் கல்வி பயின்ற நாம் நெடுங்காலமாக ஒருவரை ஒருவர் சந்திக்கவில்லை. 1978-ம் ஆண்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சந்தித்தோம். பழைய கதைகள் கதைத்தோம். அவர் புல்லாங்குழல் வாசிப்பார். பெரும் சங்கீதப் பிரியன். தான் பெரிய டாக்டர் என்ற பெருமையே இல்லை. அருமையான டாக்டரையும், அன்பான ஒரு நண்பனையும் இழந்து ஆழ்ந்த துயரத்தில் வாடுகின்றேன். அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

185/7 கில்னர் லேன், வண்ணார்பண்ணை. (9472)

M. S. சண்முகநாதன் (நாதஸ்வரம்)

உ

# 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



பூந்தளிராய்
04 - 02 - 67

புதைவிதையாய்
22 - 09 - 90

## கடற்புலி மேஜர்வின்சென்ட்-யப்பான்
(நவரெத்தினம் வசந்தன்)

கள்ளம் அறியா, கபடும் அறியா-
வெள்ளை மனத்தோன் - வசந்தன் இவனே!
உள்ளம் மலர உறவும் தழுவ - உயிர்
நாதமாய் உலவிய வேங்கை இவனே!
துள்ளும் மனதில், தோன்றும் கனவில் - துயர்
தந்தும், உரு மறைத்தோன் இவனே!
அள்ளும் வேளையும், அருந்தும் போதிலும்,
அங்கும், இங்கும்-நிழலாய் இருப்பவன் இவனே!

இத்தினத்தில், இவருடன் கடலினில் வீரச்சாவெய்திய ஏனைய கடற்புலி மாவீரர்க்கும் எமது இதய அஞ்சலியை செலுத்துகின்றோம்.

மேஜர் யப்பான் வீதி, வல்வெட்டித்துறை. (9470)

- குடும்பத்தினர்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்

## சிந்தனைக்கு..

குரங்கை வளர்ப்பவன் அது உடைக்கும் கண்ணாடிகளுக்கு செலவை ஏற்க சித்தமாய் இருக்கவேண்டும்.

- ஜோன் செல்டன்

ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 22 09-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2034
தபால்பெட்டி எண்-05

# இராணுவமே முழுப் பொறுப்பு

'போர் நிறுத்தத்தை நாம் விரும்புவதற்குக் காரணம், உண்மையான சமாதான சூழ்நிலையை உருவாக்குவதற்கே அன்றி வேறொன்றிற்குமல்ல'.

'போர் நிறுத்தம் செய்யப்படாத சூழ்நிலையில் திடீரென எதிர்பாராத வகையில் மோதல்கள் நிகழலாம். உயிர்ச்சேதங்கள் ஏற்படலாம். இந்த நிகழ்வுகள் இடம்பெறும் பொழுது அவை சமாதான சூழலையும், பேச்சுக்களையும் பாதிக்கும் அல்லவா'?

அண்மையில் தலைவர் பிரபாகரன் பி.பி.ஸி தமிழோசையின் நிகழ்ச்சித் தயாரிப்பாளர் ஆனந்தி எழுப்பிய கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கையில் பதில் கேள்வி எழுப்பினார். இது இன்று எத்தகைய யதார்த்தபூர்வமான கேள்வி என்பதை சகலரும் புரிந்து கொள்ள முடியும்.

சமாதானப் பேச்சுவார்த்தை, அரசியற்தீர்வு என்பனவற்றிற்கு, சமாதானத்தின் மீது மக்களுக்கு நம்பிக்கையும், அந்நம்பிக்கையை உருவாக்க வேண்டிய நல்லெண்ணச் சூழ்நிலையும் அவசியமானதாகும். இல்லாது போனால் சமாதானத்தீர்வென்பது பேச்சளவில் மட்டும் கூடியதாகவே இருக்க முடியும், இதனைப் புலிகள் நீண்டகாலமாகவே வற்புறுத்தியும் வருகின்றனர்.

கடற்புலிகள் கற்பிட்டிக் கடற்பரப்பில் மேற்கொண்ட தாக்குதலானது, சமாதானத்திற்கான சூழ்நிலையின் பாதிப்பை ஏற்படுத்தலாம், இராணுவத்தரப் பினரின் பிடியை இறுக்கமடையச் செய்யலாம் என சில அரசியல் விமர்சகர்கள் கருத்துக்களை முன் வைக்கின்றனர். இது எத்துணை சரியானது?

பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவி ஏற்ற பின்னர் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படும் எனத் தெரிவித்து வருகின்றனரே ஒழிய

# ஆடைத்தொழிற்சாலைகளின் நிலை அழிவின் விளிம்பில் உள்ளது

### ஆய்வுக்குழு அறிக்கை

(கொழும்பு)

இரு நூறுஆடைத்தொழிற்சாலை திட்டத்தில் பொருளாதார கண்ணோட்டத்தை விட அரசியல் நோக்கங்களே மேலோங்கி நின்றதன் காரணமாக வளர்ச்சி அடைந்து வந்துள்ள இத்துறை அழிவின் விளிம்புக்கு வந்துள்ளது

தற்காலிக நோக்கத்துடன் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டமையும், அவை அவசரமாக அமுல் செய்யப்பட்டமையும் இத்திட்டத்தின் தோல்விக்குப் பிரதான காரணமாகும்.

இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் பொருளாதார ஆய்வுக்குழு 200 ஆடைத் தொழிற்சாலை திட்டத்தின் தற்போதைய நிலைபற்றி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. சர்வதேச ரீதியில் இத்தொழில் விருத்தியடைவதற்கான வாய்ப்புகள் பற்றியும் ஆராயப்பட்டது.

## மீட்கப்பட்ட கடற்படையினர் ராணுவ ஆஸ்பத்திரியில்

(கொழும்பு)

''கற்பிட்டி கடலில் போர்க் கப்பல் மூழ்கடிக்கப்பட்ட போது உயிர்தப்பிய 16 கடற்படையினரும் கொழும்பு இராணுவ மருத்துவமனைக்கு விமானம் மூலம் கொண்டு செல்லப்பட்டுள்ளனர். இவர்கள் கூறுவதிலிருந்து கடலில் என்ன நடந்தது என்பதை அனுமானிக்க முடிகிறது. கடற்படையின் கப்பல் மீது வெடிமருந்து அடங்கிய விசைப்படகு ஒன்று வந்து மோதித்தாக்கியதாக அவர்கள் கூறுகின்றனர். கப்பலில் இருந்து கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய ஆரம்பிக்க வெடிமருந்து நிரம்பிய இரண்டாவது படகும் வந்து கப்பல்மீது மோதியிருக்கின்றது''. இவ்வாறு கற்பிட்டியில் கடற்படை படகு மூழ்கடிக்கப்பட்டது தொடர்பாக கருத்து தெரிவித்த பி.பி.சியின் கொழும்பு செய்தியாளர் ஜோர்ஜ் ஆர்னி குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கப்பல் இப்போது மூழ்கிவிட்டது. கடலில் குதித்த கடற்படையினர் மீதும் கடற்புலிகள் நீரில் வைத்தே துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக உயிர் தப்பியோர் கூறுகின்றனர்

அக்கடற்படை கப்பலின் தலைவர் உட்பட குறைந்தது மூவர் புலிகளால் கைதிகளாகப் பிடிக்கப்பட்டதாகவும் தப்பியோர் கூறுகின்றனர்.

## ஊனமுற்ற படையினருக்கு பேருந்துகளில் தனியிடம்

(கொழும்பு)

மதகுருமார் மற்றும் பெண்களுக்கென பேருந்துகளில் தனியிடம் ஒதுக்கப்படுவதைப் போல ஊனமுற்ற படையினருக்கும் தனியிடம் ஒதுக்கப்பட நடவடிக்கை எடுக்க இருப்பதாக போக்குவரத்து அமைச்சர் திருமதி சிறிமானி அத்துலத் முதலி தெரிவித்துள்ளார்.

போக்குவரத்து அமைச்சில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில், பேருந்து சேவையில் சுமார் 4500 ஊழியர்கள் தேவையில்லாமல் சம்பளம் பெறுவதாகவும், குறிப்பிட்டார்.

## பல்வேறு வீதிவிபத்துக்களில் எட்டுப்பேர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்ற வீதிவிபத்துச் சம்பவங்களில்கடந்ததிங்களன்று எட்டுப்பேர் காயமடைந்து யாழ். போதனா மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உரும்பிராய், இந்திரன் நாகராசா(வயது34)உரும்பிராய், பகவதி தயாளினி (வயது 55) பண்டத்தரிப்பு, லோகநாதன் ராஜா (வயது54)உடுப்பிட்டி, காசிப்பிள்ளைவேலுப்பிள்ளை (வயது 62) நீர்வேலி, சிறிசாந்தன் உமாபதி(வயது 60), அந்தோணிப்பிள்ளை சாந்தினி

## கோதுமை இறக்குமதி

(கொழும்பு)

அமெரிக்காவிடமிருந்து 80,000 மெற்றிக் தொன் கோதுமையை இலங்கை இறக்குமதி செய்யவுள்ளது. குறைந்த வட்டி விகிதத்தில் நீண்டகாலத் தவணையில் அமெரிக்கா இவ் உதவியை கடனடிப்படையில் வழங்கவுள்ளது

## உடைத்த நிலையில் தபால்கள்

(யாழ்ப்பாணம்)

இம்முறை வந்த வெளிநாட்டுக் கடிதங்களும் உடைத்து வந்துள்ளது.

தென்பகுதியில் இருந்து இம்முறை நானூற்றி பதின்ஐந்து தபால் பொதிகள் 'மாகோ' கப்பலில் குடாநாட்டுக்கு எடுத்து வரப்பட்டுள்ளது. இவற்றில் வெளிநாடுகளில் இருந்து அனுப்பப்பட்ட கடிதங்கள் வழமையைப் போல் இம்முறையும் உடைந்தநிலையில் வந்து சேர்ந்துள்ளதாக பிரதம தபால் அலுவலக வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது. (88. தி)

## மண்ணெண்ணெய் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மக்களுக்கான 18ஆவது சுற்றுமண்ணெண்ணெய் விரைவில் விநியோகிக்கப்படவுள்ளது பருத்தித்துறை துறைமுகத்தைவந்தடைந்துள்ள 'மாகோ' கப்பலில்இருந்து இறக்கப்படும் மண்ணெண்ணெய்பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் குடு

## நீ தமிழன் வாழ்வில் மூச்சு

தமிழனின் உடலிலே - நீ
இதயத்தின் இடது அறை.
உனது சாவு
எண்டிசையும் வாழும் எம்மவருள்
விடுதலைத் தாகத்தை எழுப்பியது.
நீ - போராட்ட நியாயத்தை
பாரெல்லாம் தட்டித்
திறந்து சொன்ன பேரிகை.
நீ - தேசம் வெளிச்சம் பெற
தேகத்தை நெருப்பாக்கிய
மெழுகுவர்த்தி.
பிறப்பிலே - நீ
வசந்த காலப்பறவை - ஆனால்
இறப்பிலோ நீ பெரும் வரலாற்றில்
அத்தியாயம்.
உனது பேச்சுக்கள் வீச்சுக்களாகி
உயிர் மூச்சுக்களாகினவே
அவை எதிரிகளின் பாசறையை எரிக்கும்;
உன் எண்ணங்களை
வண்ணங்களாக்கிட
உன்பாதச் சுவடுகளில்
எண்ணிலடங்கா சிற்பிகள்
தடம்பதித்து வருகின்றார்கள்.
உன் கருத்துக்கள், குருத்துக்களாகி,
பூவாகி, காயாகிவிட்டன.
இன்னும் சிலநாளில்...........
அவை கனிவாகும்,
நீ - நடந்த தெருக்கள்
பதுங்கிய குழிகள்
களமாடிய காப்பரண்கள்
எங்கும் பூபாளம் கேட்கும்;
ஆம், அன்றுதான் தமிழினத்தின் தலைநிமிரும்

- கிருஸ்ணா நவநீதன்
தொண்டைமானாறு

## இவன் எழுத முடியாத காவியம்

ஓ.....
திலீபனே ?
பசி யெனும்
தீயில்
வெந்து மடிந்தவனே?
பாரதத்து
பாவிகளால்
மண்ணோடு சாய்ந்த
மாவீரனே.

உன்னையும்
உன் தாய்
தாலாட்டி
பாலூட்டி
முத்தமிட்டு
நெஞ்சினிலே சீராட்டி
தானே
வளர்த்தாள்
ஆயினும்
எப்படியடா
பாசம் மறக்க முடிந்தது.
நேசம் துறக்க முடிந்தது.

பாதிப்பை ஏற்படுத்தலாம், இராணுவத்தரப் [illegible] பிடியை இறுக்கமடையச் செய்யலாம் என சில அரசியல் விமர்சகர்கள் கருத்துக்களை முன் வைக்கின்றனர். இது எத்துணை சரியானது?

பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவி ஏற்ற பின்னர் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படும் எனத் தெரிவித்து வருகின்றனரே ஒழிய பெரிய அளவிலான / உருப்படியான நடவடிக்கைகள் எதையும் இதுவரை மேற்கொண்டதாக இல்லை. சில பொருட்கள் மீதான தடைகளை நீக்கியது உண்மையாயினும், ஆனால் அதுவே இனப்பிரச்சினை தீர்விற்கான நல்லெண்ண சூழ்நிலையை உருவாக்கிவிட்டதாகக் கொள்ள முடியாது.

மாறாக நல்லெண்ண சூழ்நிலை உருவாக்குவதற்கு அரசாங்கம் செய்த நடவடிக்கைகளை விட ஆயுதப்படையினர் நல்லெண்ண நடவடிக்கைக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகளே அதிகமாகும். இந்நிலையில் நல்லெண்ண சூழ்நிலை ஒன்று உருவாகி வந்தது என்ற விமர்சகர்களின் கருத்தே கேள்விக்குரியதொன்றாகும். இதில் நல்லெண்ண சூழ்நிலை உருவாக்கத்திற்கான ஒரு சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன என்பதே சரியானதாகும்.

அத்தோடு கடற்புலிகள் மேற்கொண்ட தாக்குதல் குறித்து கடற்படைத்தரப்பினரோ அன்றி மற்றைய ஆயுதப்படைத்தரப்பினரோ ஆத்திரம் அடைவதற்கு எதுவுமே இல்லை. மாறாக யுத்த நிறுத்தம் தேவையில்லை எனத் தாம் வற்புறுத்தியதற்கு ஏற்றதாக நிகழ்ச்சிகள் நடைபெறுவதாக எண்ணிக் கொள்வதோடு அதற்கான பொறுப்பையும் அவர்களே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஆனால் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் கூறிக்கொள்வது போன்று முழுமையாக சமாதானத்தில் நம்பிக்கை கொண்டிருக்குமானால், அது இராணுவத்தின் மீது குறைப்பட்டுக் கொள்வதற்கு நியாயம் உண்டு. ஏனெனில் சமாதானத்தீர்வு பற்றி அரசாங்கம் இராணுவத்தரப்பிற்கு விளங்கப்படுத்துவதற்கு எடுத்துக் கொண்ட முயற்சிகள் தோல்வியிலேயே முடிவடைந்திருந்தன. இராணுவம் யுத்த நிறுத்தம், குடாநாட்டிற்கான தரைவழிப்பாதை திறப்பு ஆகிய விடயங்களில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டிற்கு ஒத்துப்போகவில்லை.

இந்நிலையில் இராணுவத்தின் பிடிவாதமான போக்கே இந்நிலைக்குக் காரணம் என அரசாங்கம் சுட்டிக்காட்ட முடியும் அரசியல் தீர்வு காண்பதற்கு இராணுவம் போடும் முட்டுக்கட்டையை வெளிப்படுத்த முடியும். இதைவிடுத்து விடுதலைப் புலிகளை நம்ப முடியாது. போர் நிறுத்தம் செய்ய முடியாது என்று தொடர்ந்தும் இராணுவம் சாதிக்குமேயானால், பேச்சு வார்த்தைகளில் இவ்வாறான நெருக்கடிகள் தவிர்க்க முடியாததோடு காலம் காலமாக தமிழ் மக்களை ஏமாற்றி வந்த சிங்கள தலைமையை தமிழ் மக்கள் எவ்வாறு நம்ப முடியும் என்ற கேள்வி எழுப்புவதும் தவிர்க்க முடியாது போகலாம்.

(யாழ்ப்பாணம்)

யாழ் குடா நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்ற வீதி விபத்துச் சம்பவங்களில் கடந்த திங்களன்று எட்டுப்பேர் காயமடைந்து யாழ். போதனா மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சிறிகாந்தன் முருகதாசன் (வயது 21) சாவகச்சேரி, ஆர். இந்திராணி (வயது 47) உரும்பிராய், இந்திரன் நாகராசா (வயது 34) உரும்பிராய், பகவதி தயாளினி (வயது 55) பண்டத்தரிப்பு, லோகநாதன் ராஜா (வயது 54) உடுப்பிட்டி, காசிப்பிள்ளை வேலுப்பிள்ளை (வயது 62) நீர்வேலி, சிறிசாந்தன் உமாபதி (வயது 60). அந்தோனிப்பிள்ளை சாந்தினி (வயது 65) குருநகர் ஆகியோரே காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களாவர். (88)

# தாதியர் சீருடைக்கு பதில் 5200 ரூபா பணம் கிடைக்கும்

(நமது நிருபர்)

தாதிய உத்தியோகஸ்தர்களுக்கு வழங்கப்பட்டுவந்த சீருடைக்குப் பதிலாக இவ்வாண்டு தொடக்கம் ஐயாயிரத்து இருநூறு ரூபா பணமாக வழங்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

மேற்படி இக்கொடுப்பனவு மார்ச் மாத வேதனத்துடன் சேர்த்து தாதிய உத்தியோகஸ்தர்களுக்கு வழங்கப்பட வேண்டும் எனவும், சுகாதார அமைச்சு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு அனுப்பிவைத்துள்ள சுற்று நிருபத்தின் மூலம் அறிவித்துள்ளது.

இதேவேளை ஏற்கனவே முன்னர் நடைமுறையில் உள்ளது போன்று சீருடைத்துணி, சப்பாத்து, தையல், சலவைப்படி வழங்கப்பட்டிருப்பின் அதற்கான தொகையைக் கழித்துக்கொண்டு மீதியை வழங்குமாறும் அச்சுற்று நிருபத்தில் மேலும் கேட்கப்பட்டுள்ளது.

அச்சுற்று நிருபத்தில் மேலும் மாணவத் தாதியர்களுக்கு இது பொருந்தாதெனவும், அவர்களுக்கு சீருடைத்துணி, சப்பாத்து, தையல் சலவைப்படிகள் மட்டுமே வழங்கப்படுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (சி)

# அமைப்பாளர் பதவியை போல்பெரேரா துறப்பு

(கொழும்பு)

ஐ. தே. கட்சியின் அத்தனகல தேர்தல் தொகுதி அமைப்பாளர் போல் பெரேரா தனது அமைப்பாளர் பதவியில் இருந்து ராஜினாமாச் செய்துள்ளார்.

இவர் ஐ. தே. கட்சியின் முன்னாள் அமைச்சராவார்.

இவர் ஐ. தே. கட்சியின் தலைமைப்பதவியில் ஏற்பட்ட இழுபறி நிலையைத் தொடர்ந்து மேற்படி அமைப்பாளர் பதவியில் இருந்து ராஜினாமாச் செய்துள்ளார்.

# லயனல் பெர்னாண்டோ இந்தியா பயணம்

(கொழும்பு)

தகவல் ஒலிபரப்பு அமைச்சின் செயலாளரும், புலிகளுடனான பேச்சுக்களில் அரசின் பிரதிநிதியாக கலந்து கொள்ளவிருப்பவர் எனக் கருதப்படுபவருமான, லயனல் பெர்னாண்டோ தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு இந்தியா சென்றுள்ளார் என கொழும்பு தினசரி ஒன்று தெரிவித்துள்ளது. இந்தியாவில் மத்திய அரசின் உயரதிகாரிகள் சிலரையும் இவர் சந்திக்கவுள்ளதாகவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

...ன 18 ஆவது சுற்று மண்ணெண்ணெய் விரைவில் விநியோகிக்கப்படவுள்ளது பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்துள்ள 'மாகோ' கப்பலில் இருந்து இறக்கப்படும் மண்ணெண்ணெய் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் குடும்ப அட்டை ஒன்றிற்கு மூன்று லீற்றர் வீதம், லீற்றர் 23 ரூபா விலையில் வழங்கப்படவுள்ளது சங்கங்கள் தமக்குரிய ஒதுக்கீடுகளை பருத்தித்துறை இறங்குதுறையிலும் புனர்வாழ்வுப்பகுதி களஞ்சியத்திலும் பெற்று விநியோகத்தை ஆரம்பிக்குமாறு புனர்வாழ்வுப் பகுதி திட்டப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (22)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

### 1994-09-22

### வியாழன் இரவு

08.01- தியாகதீபம் லெப்ரினன்ட் கேணல் திலீபனின் 7-ம் ஆண்டு நினைவாக சிறப்பு நிகழ்ச்சி - சி. கண்ணம்மா எழுதிய 'கீழ்வானில் எழுந்த கதிர்''
08 20- உழைப்போம் உயர்வோம் - நிகழ்ச்சியில் ''நன்னீர் உவராவதற்கு குடாவமைப்பும் ஒருகாரணம்'' தனிநடப்பு
08.30- செய்திகள்
08 40- கற்பிட்டிக் கடற்பரப்பில் போர்க் கப்பல் தகர்க்கப்பட்டதை யொட்டி சிறப்பு நிகழ்ச்சி

### 1994-09-23

### வெள்ளி காலை

07 02- மாவீரவணக்கம்
07.15- மணியாரம்
07.30- செய்திகள்
07 35- பத்திரிகைச்செய்திகள்
07 40- தியாகதீபம் லெப்ரினன்ட் கேணல் திலீபனின் 7-ம் ஆண்டு நினைவாக சிறப்பு நிகழ்ச்சி - நல்லூர் ஈழதாசன் குழுவினர் தயாரித்து வழங்கும் ''தியாகதீபம் திலீபன்'' வில்லிசை

முத்தமிட்டு
நெஞ்சினிலே சீராட்டி
தானே
வளர்த்தாள்
ஆயினும்
எப்படியடா
பாசம் மறக்க முடிந்தது.
நேசம் துறக்க முடிந்தது.

ஓ ......
நீங்கள்
உயிரினும்
மேலாக
உரிமையை
நேசிப்பவர்கள் அல்லவா.

நெஞ்சுருக - உன்
உடலுருக - ஏன்
உயிர் உருகி - எம்
மண்ணுக்காக
மெழுகுவர்த்தியாக
உருகிய
வீர புஷ்பமே -
உன்
வீரம்
இத்தனை
வலியதா ? - உன்
ஈகம்
இத்தனை
பெரியதா ... ... ?

ஆம் !
நீ ... ...
எழுத
முடியாத காவியம்
அல்லவா ... ... !

சோ. மதீசன்

# புனர்வாழ்வுக்கான நிதியில் பெருமளவில் மோசடி

## அமைச்சர் அஷ்ரப் தெரிவிப்பு

(கொழும்பு)

புனர்வாழ்வு நடவடிக்கைக்காக ஒதுக்கப்பட்ட நிதியில் கணிசமான அளவு மோசடிகள் நடைபெற்றுள்ளதாகவும் இதற்கான பூர்வாங்க விசாரணை மேற்கொள்ளப்பட்டு இவர்கள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்போவதாக புனர்வாழ்வு அமைச்சர் எம்.எச். எம் அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

திருகோணமலைக்கான உத்தியோக பூர்வமான விஜயம் ஒன்றை மேற்கொண்ட அவர் வடக்கு கிழக்கு மாகாணசபை உத்தியோகத்தர்கள் மத்தியில் உரையாடும்போது இக்கருத்தை தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் சென்ற அரசாங்கத்தில் இவர்கள் அரசியல்வாதிகளின் உதவியுடன் வடக்கு கிழக்கு மாகாணத்தில் புனர் நிர்மாண நிதியில் மோசடிகளில் ஈடுபட்டுள்ளதாக தகவல் தனக்கு கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவித்துள்ளார்

பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட மேற்படி நிதி தமது சொந்த தேவைகளுக்கு பயன்படுத்தியதை அங்கீகரிக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மாகாண பொலிஸ் படை அமைக்க மத்திய அரசிடம் வற்புறுத்து

(கொழும்பு)

மாகாண சபைகளுக்கு என தனியான விசேட பொலிஸ் படையொன்று அமைப்பது தொடர்பாக, மாகாண சபைகளுக்கும் அரசுக்கும் இடையில் சர்ச்சை எழுந்துள்ளதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது விடயத்தில், அரசாங்கம் விரைவில் ஒரு முடிவு எடுக்க வேண்டுமென்று சட்டமா அதிபர் இலாகாப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளதாகவும், பொலிசாரின் அதிகாரங்கள், கடமைகள் சம்பந்தமாக அரசியல் யாப்பின் 13-வது திருத்தத்திற்கமைய, 1990ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பொலிஸ் கமிஷன் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இச் சட்டம் நிறைவேற்றப்பட்டாலும் இச் சட்டம் இன்னும் அமுல் செய்யப் படவில்லை என்றும் அப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதற்கென பொலிஸ் கமிஷன் ஒன்றை நியமித்து, பொலிஸ் அதிகாரங்கள் மாகாணசபைகளுக்கு பரவலாக்கப்படாவிடின் அது அரசியல் யாப்பை மீறிய செயலாகும். தற்போதுள்ள பொலிஸ் கமிஷன் சட்டத்தின்படி பொலிசார் 3 பிரிவுகளாக பிரிக்கப்பட வேண்டும். தேசியப் பொலிஸ் படை மாகாண பொலிஸ் படை என்பனவும் அவற்றில் அடங்கும். பொலிஸ் கமிஷன் சட்டத்தை அரசாங்கம் அமுல் செய்யும் வரையிலும், பொலிஸ் அதிகாரங்கள் மாகாணசபைக்கு வழங்கப் படமாட்டாது எனவும் அப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## அரசியலமைப்பை திருத்த தெரிவுக்குழு நியமனம்

அரசியலமைப்பில் திருத்தங்கள் கொண்டு வருவது பற்றி பரிசீலனை செய்வதற்காக பாராளுமன்றத் தெரிவுக் குழு ஒன்று அமைக்கப் படவுள்ளது.

அரசியலமைப்பில் திருத்தங்கள் கொண்டு வருவது பற்றியோ அல்லது முற்றாக அரசியலமைப்பை மாற்றுவது பற்றியோ இத் தெரிவுக்குழு சிபாரிசு செய்யும்.

பாராளுமன்ற தெரிவுக் குழுவின் உறுப்பினர்கள் பற்றி சபாநாயகர் அறிவிப்பார். இத்தெரிவுக் குழுவில் 19 பேர் அங்கம் வகிப்பார்கள்.

இது சம்பந்தமான பிரேரணை நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது


ஜெய்ப்பூரின் இதய அஞ்சலிகள்

JAIPUR FOOT WORKSHOP JAFFNA BRANCH

இவர்களின் வாழ்வு இனிதே அமைக
என
பணி புரியும் எமது ஸ்தாபனத்திற்கு உறு துணையாக நின்று அரிய சேவைகள் ஆற்றிய
வைத்திய கலாநிதி சு. பொன்னம்பலம்
அவர்கட்கு
எம் இதய அஞ்சலிகள்

நிர்வாகக் குழு
ஊழியர்கள்
ஜெய்ப்பூர் செயற்கைக்கால் நிறுவனம்
(சி-10386)


### புதிய ஆசிரியர்

...வித சிரமமுமின்றி திறமையடிப்படையில் முதலாந் தரத்துக்கு பதவியுயர்வு பெறலாம். இந்த ஆசிரியர் சேவை அமுலுக்கு வந்ததும் பயிலுனர் ஆசிரியர் என்ற தரம் அற்றுப் போய்விடும் எதிர்காலத்தில் சகல ஆசிரியர்களும் குறிப்பிட்ட காலத்துக்கு கஷ்டப் பிரதேசத்தில் சேவை செய்வது கட்டாயமாக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

### பொதுநல

கடந்த காலங்களில் இவ்வமைப்புகளுக்கான வழி நடத்தல்களையும், கண்காணிப்புக்களையும் மேற்கொண்டிருந்த நிர்வாகங்கள், அவ்வமைப்புக்கள் தமது உண்மையான நோக்கங்களை வென்றெடுக்கும் வகையில் செயற்படவில்லை.

அண்மைக் காலமாக இப் பொதுஅமைப்புக்கள் பற்றிய தொடர்பு முறைகளும் அறிவுறுத்தல்களும் அவை மத்தியில் குழப்பமான நிலைமைகளை உருவாக்கியுள்ளன. மேலும் இவற்றின்பால் மக்களின் நாட்டம் வெகுவாக குறைந்துவருகின்றது. பெரும்பாலான அமைப்புக்கள் ஒரே நிர்வாகத்தின் கீழ் தொடர்ந்து பல காலம் இருந்துவரும் நிலைமை அவதானிக்கப்பட்டுள்ளது அத்துடன் அவற்றின் சொத்துக்கள், பல இலட்சம் ரூபா வரையிலான நிதிக் கையாள்கை போன்றவைகூட எவ்வித வழிகாட்டும்/கட்டுப்படுத்தும் அமைப்பின் பொறுப்பிலும் இல்லாது தன்னிச்சையான நடைமுறை பின்பற்றப் பட்டு வருகின்றது.

குலைந்து போகும் அல்லது நோக்கம் தவறி செயற்படும் இவ்வமைப்புக்களை மறுசீரமைத்து எம்மக்கள்சமூகத்தின் அவசிய, அடிமட்ட தேவை...

# தியாகி திலீபன் நினைவு உண்ணாவிரத நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

தியாகி லெப். கேணல் திலீபன் நினைவாக வட்ட ரீதியாக உண்ணாவிரதங்கள் நடைபெற்று வருகின்றன. இவ் உண்ணாவிரத நிகழ்வுகள் இன்று காலை 7 00 மணிக்கு பின்வரும் இடங்களில் ஆரம்பிக்கும்;

வலிகாமம் கோட்டம் உடுவில் வட்டத்தில் சுன்னாகம் சிவன் கோவிலடியில், அளவெட்டி - மல்லாகம் பெருமாள்கடவை முகாம், கொம்பனிப்புலம் முகாம், கலைவாணி ச.ச நிலையம், தேன் தமிழ் ச. ச. நிலையம், அளவெட்டி தையற்பயிற்சி நிலையம், திலீபன் முகாம், நீதிவான் முகாம் என்பனவும், சங்கானை வட்டத்தில் வடக்கம்பரை அம்மன் கோவிலடியில், வட்டு சிற்றூர் மக்களும், சண்டிலிப்பாய் வட்டத்தில் ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் கோவிலடியில் ஆனைக்கோட்டை சிற்றூர் மக்களும் கோப்பாய் வட்டத்தில் நீர்வேலி கந்தசுவாமி கோவிலடியில் புத்தூலட்டி சிறீவிஷ்ணு வித்தியாலயம், புத்தூர் பஞ்சசீல வித்தியாலயம், வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலயம், நவக்கிரி அ.மி.த க. பாடசாலை, புத்தூர் மாதர்சங்கம் தையற்பயிற்சி நிலையம், உற்பத்திக் குழு ச. ச. நிலையங்கள் என்பனவும் யாழ். நல்லூர் வட்டத்தில் நல்லூர் கந்தசுவாமி கோவிலடியில் சாரணர் இயக்கம், சென். யோன்ஸ் அம்புலன்ஸ், மக்கள் நலன் காக்கும் கழகம், கொக்குவில், அரசசார்பற்ற நிறுவனம், வர்த்தக திணைக்களம், நல்லூர் பிரதேச சபை என்பனவும் கலந்துகொள்கின்றன.

தீவகக் கோட்டத்தில் அரியாலை நாச்சிமார் கோவிலடியில், புங்குடுதீவு மகா வித்தியாலயம், புங்குடுதீவு சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம், நீதிவான் குடியிருப்பு என்பன கலந்து கொள்கின்றன.

தென்மராட்சிக் கோட்ட கைதடி வட்டத்தில் கைதடி சந்திக்கருகாமையில் பசுபதி ச. ச. நிலையம், கைதடி வடக்கு ச.ச. நிலையம் என்பனவும், சாவகச்சேரி வட்டத்தில் மணங்குணாப்பிள்ளையார் கோவிலடியில் சரசாலை மட்டுவில் மீசாலை சலவைத் தொழிலாளர் சங்கமும் கொடிகாமம் வட்டத்தில் 190-ம் கட்டை புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் கலிபன் நிதி ச. ச. நிலையம், அல்லாரை வடக்கு, கொடிகாமம் வடக்கு, ஐயனார் கோவிலடி, போர்க் குடியேற்றத் திட்டம், காளி கோவில் குடியிருப்பு என்பனவும் பளை வட்டத்தில் இரட்டைக் கேணி அம்மன் கோவிலடியில் வண்ணாங் கேணி தம்பகாமம் மக்களும் கலந்து கொள்ள உள்ளனர்.

வடமராட்சிக் கோட்டம் பருத்தித்துறை வட்டத்தில் மந்திகை அம்மன் கோவிலடியில் மந்திகை-மிருகவைத்திய நிலையத்தினரும், கரவெட்டி வட்டம் துன்னாலை கலிகைக் கந்தசாமி கோவிலடியில் விக்னேஸ்வரா கல்லூரி, திருஇருதயக் கல்லூரி என்பனவும், உடுப்பிட்டி வட்டத்தில் நாவலடி வைரவர் கோவிலடியில் மூத்தவிநாயகர் ச ச. நிலையம், ஜோதி ச. ச. நிலையம், இராஜாஜி ச. ச. நிலையம், அம்பிகை ச. ச. நிலையம், உடுப்பிட்டி மாதர் சங்கம், உடுப்பிட்டி பெண்கள் கல்லூரி என்பனவும் கலந்துகொள்கின்றன.

கடற்புலிகள் பிரதேசத்தில் கொழும்புத்துறை சந்திக்கு அருகாமையிலும், தும்பளை நெல்லண்டை அம்மன் கோவில் முன்றலிலும் உண்ணாவிரத நிகழ்வு நடைபெறவுள்ளது.

### மின்னல்

எதிர்த் தாக்குதலை மேற்கொள்ள முடியாது போய் விட்டது என்றார்

மேலும் படகுகள் மோதி வெடித்ததும் கப்பல் பாரிய சேதத்திற்குள்ளானது. இதனால் கப்பல் ஒருபக்கம் சரிந்ததுடன் நீரில் மூழ்கத் தொடங்கியதாகவும் அது நீரில் மூழ்கிக்கொண்டிருந்ததைத் தான் கண்டதாகவும் தெரிவித்தார்.

புள்ளியிடும் திட்டம்தான்
பாடத்திட்டம் என்று
கற்ற,
கற்பித்தவர்களின்
கதி
இனி என்னாவது?

## அதிபர்களுக்கான கூட்டம்

உடுவில் கல்விக் கோட்ட அதிபர்களுக்கான கூட்டம் நாளை வெள்ளி பி-ப 2-30 மணிக்கு இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருப்பதால் சகல பாடசாலை அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளும்படி உடுவில் கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

### 3க்குமேற்பட்ட

...யான படையினரின் தொகை பின்னர் மேலும் அதிகரிக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கடற்படைக் கப்பல் சாகரவர்த்தனா சம்பவ தினம் கொழும்பு கடற்படை தளத்திலிருந்து மன்னார் கடற்படை தளத்திற்குச் சென்று கொண்டிருந்த போதே தாக்குதலுக்கு உள்ளானதாக கடற்படை அதிகாரிகளை மேற்கோள் காட்டி லங்கா தீப சிங்கள தினசரி செய்தி வெளியிட்டுள்ளது.

### புலிகளின்

பலமான நிலையில் இருந்தே இப் பேச்சு வார்த்தைக்கு வந்துள்ளனர் என்பதைத் தெரிவிக்கும் நோக்குடன் கற்பிட்டியில் கப்பல் மீது தாக்குதல்கள் மேற் கொள்ளப் பட்டது

இத் தாக்குதல் பேச்சுவார்த்தைக்கு சமாதான சூழ்நிலை தேவை யென்றும் அதனை நிலையான யுத்த நிறுத்தத்தின் மூலமே ஏற்படுத்த முடியும் என்பதை சிறிலங்கா அரசாங்கத்திற்கும் அவர்களின் படையினருக்கும் காட்டும் தாக்குதலாக இதனைக்கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்-

### கொலை

இதேவேளை சந்தேகநபர்கள் முழுமையாக கைது செய்யப்பட்ட பின்னரே இவர்கள் நீதிமன்றத்தின்முன்னர் நிறுத்தப்படுவர் என தெரிவிக்கப் பட்டிருந்தபோதும் இராணுவ பொலிசாரிடம் இதுவரை உதவி தொடர்பாக எந்த பேச்சும் நடக்தப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

### ஜனாதிபதி

நாயக்கா விமான நிலையத்தில் வந்திறங்கிய இவர் ஜே. வி. பியின் சர்வதேச கிளையின் பிரதம அமைப்பாளர் பீரிஸின் கடிதத்தை வைத்திருந்ததாக தெரிவித்துள்ளார்.

### உரக் கப்பல்

### வீரவணக்கம்

கப்டன் மயூரன் (சிறி ஜெயச்சந்திரன் ஜெயரூபன் கொலனி, மந்துவில் கொடிகாமம்) என்னும் இப் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

### போர்க்கப்பல்

பதிலளித்த அநுருத்த ரத்வத்த பிரபாகரன் அனுப்பிய கடிதத்தில் சமாதான பேச்சிற்கு யுத்த நிறுத்தம் அவசியம் என்று வலியுறுத்தப்பட்டிருப்பதாக குறிப்பிட்டார். யுத்தநிறுத்தம் இல்லாத சூழ்நிலையில் ஆங்காங்கே பல இடங்களில் இரு தரப்பிலும் நடக்கும் மோதல்களை தவிர்க்க முடியாது எனவே யுத்தநிறுத்த சூழ்நிலை பேச்சுவார்த்தைக்கு அவசியம் என பிரபாகரன் பி பி. ஸிக்கு அளித்த பேட்டியை சுட்டிகாட்ட விரும்புகிறேன் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

### செயலகம்

...சின் செயலாளர்களுடனும் பேசியுள்ளார் ஆனால் இவை பற்றிய எந்தப்பதிலும் வழங்கப்படவில்லை.

கப்பல் கட்டணம் நீக்கம் மீனவர் நிவாரணம், கடல் வலயத் தடைச்சட்டம் நீக்கம் கடும் பாதிப்புற்றோர்களுக்கான நிவாரணக் கொடுப்பனவு ஆகிய விஷயங்கள் பற்றி அரச அதிபர் புதிய அரச தரப்பினருடன் நீண்ட நேரம் பேசியுள்ளபோதிலும் இவை பற்றிய பதில் இன்னமும் கிடைக்கவில்லை.

புதிய அரசாங்கம் யாழ். குடாநாட்டின் செயலக நிர்வாக விடயத்தில் புதிய மாற்றங்கள் எதையும் மேற்கொள்ளவில்லை. இவற்றிற்கான காரணம் தெரியவில்லை என அரச அதிகாரி ஒருவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார். (தி)

### யாழ்.


கூட்டம் தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சர் மங்கள சமரவீர தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இக் கூட்டத்திலேயே வடபிராந்திய தபால் அத்தியட்சகர் சேது காவலர் விளக்கியுள்ளார்.

படிப்படியாக ஒவ்வொன்றிற்கும் நடவடிக்கை எடுத்து சீராக்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என வாக்குறுதி அளித்துள்ளார். (தி, 88)

### விடுதலைப்புலிகளின்

## 2ஆம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில்
11
02
1969



ஆண்டவன் அடியில்
13
10
1992

### நர்கநாதன் நிர்மலநாதன்

திதி: 21-09-1994

நெஞ்சின் நினைவலைகள்

நிமலன் திருவடியை
நிர்மலனே நீ சேர்ந்து
ஆண்டுகள் இரண்டு
உருண்டு சென்றாலும்
பெருகி வரும்
கண்ணீர் வெள்ளம்
வற்றவே இல்லையே
அன்றுபோல் இன்றும்
இன்றுபோல் என்றும்
எம் இதய அரங்கில்
நாதமாய் ஒலித்திடும்
நாதனே உன்நினைவுகள்
மாறாது மறையாது
தொடர்ந்து வரும்
நாம் உள்ளவரை.

13-10-1992 பிரான்ஸில் காலமான எம் அன்பே!

உன் பிரிவால் வாடும்,

அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பாச்சி, அக்காமார், தம்பிமார், தங்கை, மைத்துனர், மருமக்கள், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், உற்றார், உறவினர், நண்பர்கள்.

இ. நாகநாதன் (குடும்பத்தினர்)
தாளையம்பதி வீதி,
நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி. (5099)

மைத்து எம்மக்கள்சமூகத்தின் அவசிய, அடிமட்ட தேவைகளை வென்றெடுக்கத் தக்க வலுமிக்க வழிகாட்டிகளாக மாற்றியமைக்கவேண்டிய தேவையை தமிழீழ நிர்வாக சேவை உணர்ந்துள்ளது.

இந் நடவடிக்கையின் முதற் கட்டமாக கிராம அபிவிருத்தி சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், தொழிற் சங்கங்கள், விளையாட்டுக் கழகங்கள், இந்து மன்றங்கள், இளைஞர் கழகங்கள், முதலான பொதுநல அமைப்புக்கள் யாவும் எதிர்வரும் 10-10-1994 பிற்பகல் 2. 00 மணிக்கு முன்பாக தமிழீழ நிர்வாக சேவையில் பதிவு செய்து சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளுதல் அவசியமானது. இச் சான்றிதழ்கள் தமிழீழ நிர்வாக எல்லைப் பரப்பில் எந்தவொரு விடயத்திலும் குறித்த அமைப்பை உறுதிப்படுத்தும் அதியுயர் வலுக்கொண்ட ஆவணமாக இருக்கும்.

எதிர்வரும் 27-09-1994 முதல் தமிழீழ நிர்வாகசேவை அலுவலகத்தில் காலை 8 00 மணி முதல் பி. பகல் 2. 00 மணிவரை பொருத்தமான படிவங்களைப்பெற்றுக்கொள்ளலாம்.

ஃ படிவங்கள் பெறவருவோர் தாம் சார்ந்த பொதுநல அமைப்பின் தற்போதைய நிர்வாகத்தின் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணம் அல்லது விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் மூலம் தம்மை உறுதிப்படுத்தலாம்.

ஃ மேற்படி நிறுவனங்களுக்கு தூய தமிழ் பெயர்களும் நோக்கம் கருதிய பெயர்களும் சூட்டப்படவிருக்கின்றன.

ஃ பதிவு செய்யும்போது சான்றிதழுடன் யாப்பு விதிகளும் வழங்கப்படும்.

ஃ பதிவு செய்யப்படாத எந்த அமைப்பும் வலுவிழந்ததாக கருதப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- பதிவாளர், தமிழீழ நிர்வாக சேவை, பாண்டியன் தாழ்வு, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம்

இனி என்னாவது?

சென்றமுறை
பரீட்சை சரிவரச்
செய்ய முடியாததன்
காரணம்
நீங்களா
அல்லது
உங்கள் வழிகாட்டிகளா?

சமயோசிதமான
ஆசிரியத்தெரிவே
இனிமேல்
உங்களை
மீட்சிக்குரியவராக்கும்

A/L

DAY CLASS

கணித - உயிரியல் பிரிவு

ஆரம்பம்

23.09.94

காலை 8.30 மணி.

யூனிவேர்சல்
UNIVERSAL
கந்தர்மடம் சந்தி,
யாழ்ப்பாணம்.

நேச்சர்
NATURE
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

(சி/10385)

ளார்.

### உரக் கப்பல்

அதிகாரிகளினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஹரண கப்பல் மீதான வழக்கு தாக்கல் செய்யப்பட்டு பெரும் பணம் கட்டும்படி அறிவிக்கப்பட்டபோது துறைமுக அதிகாரசபையே இந்த நஷ்டப்பணத்தைக் கட்டவேண்டும் என கப்பல் கம்பனி அறிவித்துள்ளது.

துறைமுகப் பகுதியிலிருந்து காபர் மாஸ்ரர் தான் கப்பலைச் செலுத்திவந்ததாகவும் இந்தச் சமயமே இந்த விபத்து நடந்ததாகவும் இதற்கு கப்பல் கம்பனி பொறுப்பேற்க முடியாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க, கப்பலில் நீண்ட நாட்களாக ஏற்றப்பட்ட நிலையிலிருக்கும் உரத்தை வேறு கப்பலில் ஏற்றி வடபகுதிக்கு எடுத்துச்செல்வதற்கு கொழும்பில் உள்ள அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுத்திருப்பதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. [.தி 8ஜ]

### விடுதலைப்புலிகளின்

எமக்கு விட்டுத்தரத் தேவையில்லை என்றும் அன்ரன் பாலசிங்கம் கூறியதாக அமால் ஜெயசிங்கா மேலும் குறிப்பிட்டார்.

இதேசமயம் யூ என். ஐ. செய்தி ஸ்தாபனத்தை மேற்கோள்காட்டி இந்திய வானொலி செய்தி வெளியிடுகையில் அரசியல் சாசனத்தால் உத்தரவாதமளிக்கப்பட சர்வதேச சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்டதுமான சுயஆட்சி அரசு அமைந்த பிராந்திய சுயாட்சியைத்தான் விடுதலைப்புலிகள் மாற்றுத்திட்டமாக முன்வைப்பதாக குறிப்பிட்டது.

### பாதுகாப்பு

கட்டுப்பாட்டு விலைக்கு விநியோகிக்க முடியும்.

இல்லாவிட்டால் தொடர்ந்து நட்டமடைந்து பேக்கரிகள் மூடப்படும் நிலை உருவாகும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்

### நாகன் இரத்தினம்

உத்திராவத்தை புலோலி கிழக்கு பருத்தித்துறையைச் சேர்ந்த முன்னாள் இராசம் இரான்ஸ் போட் உரிமையாளர் திரு நா. இரத்தினம் 21-9 94-ல காலமாகிவிட்டார்.

இவர் திருமதி இராசமலரின் அன்புக்கணவரும், செல்வி ரேணுகாவின் அன்புத் தந்தையுமாவார்.

இவர் காலஞ்சென்ற ஆழ்வாப்பிள்ளை, செல்லமுத்து, காலஞ்சென்ற பாலசிங்கம், சுந்தரம், காலஞ்சென்ற இராசம்மா, திருமதி சிவக்கொழுந்து ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் 22-9-94 வியாழக்கிழமை பகல் ஒருமணியளவில் ஆனைவிழுந்தான் மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
மனைவி, மகள்

(9486)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994-ம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.